குருபாதம்


# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 39 ] ரௌத்திரி ஆண்டு ஐப்பசித்திங்கள் 10—11—80 [ இதழ் 12

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான

திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானம்



கார்த்திகைச் சோமவார நாட்களில்

1008 சங்காபிஷேகம் கொண்டருளும் ஸ்ரீ அமிர்தகடேசுவரர்

தருமையாதினக் குருமுதல்வர்



ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

## ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

—★—

மோகங் கரைய
முழுதும் மலம்கரைய
ஆகங் கரைய அறி
வானந்த — மோகமாய்ப்
பூரணமாய் எங்கெங்கும்
பொங்கி எழ விழித்த
ஆரணனே சொக்கநாதா.

—சொக்கநாத வெண்பா. 70

ஆசிரியர் :-
வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்

துணையாசிரியர் :-
மகாவித்துவான்
சி. அருணைவடிவேல் முதலியார்.

குருபாதம்

# "ஞானசம்பந்தம்"

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 39 || 10-11-80 || இதழ் 12

## உட்பொருள்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1 | கடைமுழுக்கு ... | 529 |
| 2 | தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை | 533 |
| 3 | கோவண ஆடையர் ... | 536 |
| 4 | இந்தியத் தத்துவச் சிறப்பு ... | 538 |
| 5 | தருமபுரம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணி மன்றம் ... | 543 |
| 6 | திருக்கலயநல்லூர், திருக்கருக்குடித் தலச் சிறப்பு ... | 545 |
| 7 | அபிராமி அந்தாதி ... | 558 |
| 8 | தஞ்சையில்தான் நெல் குத்தகை பாக்கி அதிகம் ... | 562 |
| 9 | கடிதம் ... | ,, |
| 10 | செய்திகள் ... | 563 |
| 11 | எதிர்காலம் ... | 567 |
| 12 | கார்த்திகை ஞாயிறு விழாச் சிறப்பு ... | 572 |
| 13 | ஞானசம்பந்தம் 39ம் ஆண்டு மலர்ப் பொருளடக்கம் | i |


ஆண்டுச் சந்தா உள்நாடு ரூ. 9.
ஆண்டுச் சந்தா சிலோன் ரூ. 11.
ஆண்டுச் சந்தா வெளிநாடு ரூ. 17.
ஆயுள் சந்தா உள்நாடு ரூ. 100,
ஆயுள் சந்தா வெளிநாடு ரூ. 125.

உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 39 | ரௌத்திரி - ஐப்பசி - 10—11—80 | இதழ் 12

திருச்சிற்றம்பலம்

பொன்தயங் கிலங்கொளிர் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. — சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

## கடைமுழுக்கு

திருச்சிற்றம்பலம்

பூவிரி கதுப்பின்மட மங்கையர் அகந்தொறும் நடந்துபலிதேர்
பாவிரி யிசைக்குரிய பாடல்பயி லும்பரமர் பழமையெனலாம்
காவிரி நுரைத்திரு கரைக்குமணி சிந்தவரி வண்டுகவர
மாவிரி மதுக்கிழிய மந்திகுதி கொள்ளுமயி லாடுதுறையே.

திருச்சிற்றம்பலம்.

— சம்பந்தர் தேவாரம்.

### தீர்த்தம் :

மூர்த்தி தலம் தீர்த்தம் இம்மூன்றும் உயிர்கள் இறையருள் பெறத் துணைசெய்வன. 'சென்றாடும் தீர்த்தங்கள் ஆனார் தாமே' 'ஆர்த்த பிறவித்துயர்கெட நாம் ஆர்த்தாடும் தீர்த்தன்' எனவரும் திருமுறைப்பகுதிகள் இறைவன் தீர்த்தவடிவமாகவும் இருந்து நீராடு பவர்களுக்கு நலம்பல அளித்துவருகிறான் என்பதை அறிவிக்கும்.

ஆதலின் தீர்த்தங்களில் மூழ்கும்போது திருவருட்பெருக்கில் மூழ்கு கிறேம் என்ற சிவசிந்தனையுடன் மூழ்குதல்வேண்டும். புறந்தூய்மை நீரால் அமைவதுபோல, தீர்த்தநீராடுதல் உள்ளத்தெளிவு பெறச் செய்து அகத்தில் இறையுணர்வைத் தோற்றுவிக்கும். தாமும் புனிதமாய், தம்மிடம் மூழ்கினுரையும் புனிதமாக்குவது தீர்த்தம். இத்தகைய தீர்த்தங்கள் பலவற்றுள் மாயூரம் இடபதீர்த்தம் மிக்க சிறப்புடையதாகும்.

## மயிலாடுதுறை :

தக்கன் தன் தவத்தால் உமாதேவியை மகளாகவும் இறைவனை மருமகனுகவும் அடைந்தான். அப்பேறுபெற்றும் இறைவனை மதியாது யாகம்செய்யத்தொடங்கினுன். அழைப்பில்லாமலே பாசங்காரணமாக வந்த தன்மகள் உமாதேவியை மதியாததோடு, இறைவனையும் நிந்தித்தான். அதனுல் தக்கயாகம் வீரபத்திரரால் அழிக்கப்பட்டது. உமையம்மையும் தக்கன்மகள் என்பதால் உண்டான தாக்ஷாயணி என்ற பெயர்பெற்ற பாவத்தை நீக்க எண்ணினுள். இறைவன் ஆணைப்படி மயிலுருக்கொண்டு மாயூரம் வந்து இறைவனைப் பூசித்தாள். பூசைக்கு உகந்த பெருமான் தாமும் ஆண்மயில் வடிவம் கொண்டு அம்மையுடன் தோகை விரித்து ஆடி மகிழ்ந்தார். அந்த நடனம் கௌரிதாண்டவம் எனப்படும். அதனுல் மயிலாடுதுறை என இத்தலம் பெயர்பெற்றது. மயூரம் - மயில். மயில் பூசித்ததால் மாயூரம் என்ற பெயர் வழங்கிவருகிறது. ஆனுல் தேவாரப்பதிகம் மயிலாடுதுறை என்றே குறிக்கிறது.

## இடபதீர்த்தம் :

உமாதேவியார் மாயூரத்தில் மயிலாகவந்து பூசித்தபோது இறைவன் இடபத்தின்மீது அமர்ந்து உலகைச் சுற்றிப்பார்க்கப் புறப்பட்டார். தேவர்களும் தத்தம் ஊர்திகளில் அமர்ந்து உடன் வந்தனர். அவர்கள் ஊர்தியைவிட இடபம் செருக்கோடு முற்பட்டுச் சென்றது. அதன் செருக்கை அடக்கத் திருவுள்ளம் கொண்ட இறைவன் தன் கால்விரலொன்றைச் சிறிது ஊன்ற, இடபம் அதனைத் தாங்க முடியாது பாதாளத்தில் அழுந்தியது; ஓலமிட்டது. இறைவன் திருவுளமிரங்கி 'எழுக' என்றதும், இடபம் காவிரியின் நடுவே எழுந்தது. அதன் வேண்டுகோளின்படி இறைவன் ஐப்பசி அமாவாசையன்று உத்தர மாயூரமாகிய வள்ளலார்கோயிலில் தென்முகப்பரமனுய் அமர்ந்து ஞானேபதேசம் செய்தருளினுர். அதற் கேற்ப இன்றும் தட்சிணுமூர்த்தி சந்நிதியில் இடபம் விளங்குவதைக் காணலாம். காவிரியின் நடுவில் இடபம் எழுந்த இடம் இடப தீர்த்தம் என வழங்கிவருகிறது.

## துலாஸ்நாநம் :

உலகிலுள்ள தீர்த்தங்கள் பலவும் ஒன்றுசேர்ந்து திருக்கயிலை சென்று பெருமான்முன் நின்று 'மக்கள் எங்களிடம் மூழ்கித் தங்கள் பாவங்களை நீக்கிக்கொள்வதால் அப்பாவங்கள் எங்களிடம் வந்து சார்கின்றன; அவற்றைப் போக்குதற்கு அருள்பாலிக்கவேண்டும்' என்று விண்ணப்பித்தன. அப்போது பெருமான் 'துலாமாதத்தில் மாயூரம் சென்று இடபதீர்த்தத்தில் மூழ்கி நலம்பெறுவீராக' என்று அருள்பாலித்தார். அதன்படியே அவைவந்து மூழ்கிப் பாவத்தைப் போக்கிக்கொண்டன. ஆதலின் ஐப்பசிமாதம் முழுதுமே புண்ணிய தீர்த்தங்கள்யாவும் இடபதீர்த்தத்தில் வந்து கலக்கின்றன என்பதும், ஐப்பசி அமாவாசையன்று கங்கையும் வந்து கலக்கின்றது என்பதும் புராணவரலாற்றால் அறியப்படும் செய்திகளாகும். "கங்கையிற் புனிதமாயகாவிரி" என்று காவிரி பாராட்டப்பெறுவதும் இக்கருத்துப் பற்றியேயாகும். கங்கையே இத்தலத்திற்கு வந்துள்ளதால் அருள்மிகு காசி விசுவநாதர் விசாலாட்சியுடன் இத்தீர்த்தக் கரையில் விளங்கி வருகிறார். மார்கழி நீராட்டு சிறப்பாகக் கருதப்படுவதுபோல, துலாஸ்நாநம் எனப்படும் ஐப்பசி நீராட்டு இத்தலத்திற்குப் பெருமை தருவது.

## கடைமுழுக்கு :

இடபதீர்த்தமாகிய துலாக்கட்டத்தில் அருள்மிகு அபயாம்பிகை உடனாகிய அருள்மிகு மாயூரநாதர் தம் பரிவாரங்களுடன் துலாமாதம் இறுதிப் பத்துநாட்களிலும் தீர்த்தங்கொடுத்தருளுகின்றார். இறுதி நாளன்று நடைபெறும் தீர்த்தவாரி உற்சவமே கடைமுகம் அல்லது கடைமுழுக்கு என்று வழங்கப்படுகிறது. துலாமாதம் முழுவதுமே உள்ளூர் அன்பர்களும் மாயூரத்தைச் சுற்றிலுமுள்ள சிற்றூர் மக்களும் காவிரித் தீர்த்தத்தில் நீராடுகின்றனர். இவர்களோடு தமிழ்நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் ஏராளமான பக்தர்கள் மாயூரத்திற்குவந்து தங்கியிருந்து துலாமாதம் முழுவதும் பக்தியோடு நீராடிவருவதை இன்றும் காணலாம்.

தீர்த்தவாரித் திருநாளன்று துலாக்கட்டத்தின் தென்பால் அருள்மிகு அபயாம்பிகை உடனாகிய மாயூரநாதரும், அருள்மிகு விசாலாட்சி உடனாகிய காசி விசுவநாதரும், வடபால் உத்தரமாயூரம் எனப்படும் வள்ளலார்கோயில் அருள்மிகு ஞானாம்பிகை உடனாகிய வதான்யேசுவரரும் மற்றும் அருள்மிகு ஐயாறப்பர், பாலக்கரை அருள்மிகு விசுவநாதர் முதலிய மூர்த்திகளும் எழுந்தருளிவந்து தீர்த்தம் கொடுத்தருளும் காட்சியைக் காண்பது பேரானந்தம் தருவதாகும். கும்பகோணம் மகாமகப்பெருவிழாவைப்போன்று இக் கடைமுழுக்குவிழாவும் பெருஞ்சிறப்புடையது.

## முடவன்முழுக்கு :

இத்தீர்த்தவாரியில் கலந்துகொண்டு நீராடிப் பயன்பெற விரும்பினான் ஒரு முடவன். பலநாட்களுக்கு முன்பே ஊரைவிட்டுப் புறப்பட்டான். முடவனாதலின் விரைவாக வரமுடியவில்லை. அவன் வருவதற்குள் துலாமாதம் முடிந்துவிட்டது. இருந்தாலும் அம்முடவனது பக்திமேம்பாட்டினைத் திருவுளங்கொண்டபெருமான், கார்த்திகை முதல்நாளன்று வந்து மூழ்கிய அவனுக்கும் அருள்புரிந்தார். அதனால் மறுநாளும் அவன் நினைவாக முடவன் முழுக்கு நடைபெறுகிறது. அன்றும் அன்பர்கள் நீராடி மகிழ்கின்றனர். இச்சிறப்பையெல்லாம் உள்ளடக்கி எழுந்தனவே "ஆயிரமானாலும் மாயூரமாகாது" என்ற பழமொழி.

காவிரியோடு கங்கையும் மற்றும் பல புண்ணிய தீர்த்தங்களும் கலந்து பெருகிவருகின்ற தீர்த்தத்தின் தூய்மையறிந்து இறையுணர்வோடு நீராடி வழிபடுவது மக்கள் கடமையாகும்.

களித்துக் கலந்ததொர் காதற் கசிவொடு காவிரிவாய்க்
குளித்துத் தொழுதுமுன் நின்றஇப் பத்தரைக் கோதில்செந்தேன்
தெளித்துச் சுவையமுது ஊட்டி அமரர்கள் சூழிருப்ப
அளித்துப் பெருஞ்செல்வமாக்கும் ஐயாறன் அடித்தலமே.

— அப்பர் தேவாரம்,

நீரின்ப வெள்ளத்துள் நீந்திக் குளிக்கின்ற நெஞ்சங் கொண்டீர்
பாரின்ப வெள்ளங் கொளப்பரி மேற்கொண்ட பாண்டியனார்
ஓரின்ப வெள்ளத் துருக்கொண்டு தொண்டரை உள்ளங்கொண்டார்
பேரின்ப வெள்ளத்துட் பெய்கழ லேசென்று பேணுமினே.

— திருவாசகம்.

தில்லைவனம் காசி திருவாரூர் மாயூரம்
முல்லைவனம் கூடல் முதுகுன்றம் — நெல்லைகளர்
காஞ்சிகழுக் குன்றமறைக் காடு அருணை காளத்தி
வாஞ்சியமென் முத்தி வரும்.

— ஸ்ரீ குருஞானசம்பந்தர்.



குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

ஞானசம்பந்தம் இதழுக்கு

வழங்கியருளிய

# ஆசியுரை

## வழிபடுவீர்! வளம்பெறுவீர்!!

திருச்சிற்றம்பலம்

வேட்களத் துள்ளுறை வேதியன் எம்இறை
ஆக்கள் ஏறுவர் ஆனைந்தும் ஆடுவர்
பூக்கள் கொண்டு அவன் பொன்னடி போற்றினல்
காப்பர் நம்மை கறைமிடற் றண்ணலே.

திருச்சிற்றம்பலம்

— அப்பர் தேவாரம்.

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்பது ஆன்றோர் வாக்கு. தாய்தந்தையர்களே நம்மைப் பெற்று வளர்த்து ஆளாக்கு கின்றனர். நமக்குவேண்டிய நன்மைகளையெல்லாம் செய்கின்றனர். நமது வளர்ச்சியே அவர்கள் வளர்ச்சியாகக்கொண்டு மகிழ்கின்றனர். இத்தகைய தாய் தந்தையர்களை நமக்கு அருள்பவனே கடவுள்.

தாய் தந்தையர் இன்றி நாமே நமக்கு உடல் பெற இயலாது. அதுபோல் கடவுள் அருளின்றி, நம் தாய் தந்தையரும் நமக்கு உடல் முதலியவற்றை உதவ முடியாது. எனவேதான் "ஈன்றாளுமாய் எனக்கு எந்தையுமாய் உடன் தோன்றினராய்" என அப்பர் பெருமான் அருளிச்செய்தார். மேலும் அவரே 'தாயும் நீயே தந்தை நீயே" என்றும், "தந்தையும் தாயுமாகி" என்றும், "அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ அன்புடைய மாமனும் மாமியும் நீ ஒப்புடைய

மாதரும் ஒண்பொருளும் நீ '' என்றும் ஓதியருளினர். இதுபற்றியே "தெய்வம் மனுஷரூபேண '' என்று கூறினர் பெரியோர். எனவே கடவுள் கண்ணுக்குத்தெரியாமல் மறைந்து நுட்பமாயிருந்து மனிதர் வாயிலாக நமக்கு உதவிசெய்துவருகிறார்.

'ஈயறியாப் பசுந்தேனே எழுத்தறியா மறைப்பொருளே
காயறியாச் செழுங்கனியே கற்பகத்தின் பசுங்கொழுந்தே
தாயறியாக் கருவிலிருந்து அமுதூட்டும் தாய்த்துணையே
நீயறியாச் செயலுண்டோ நிகிலபரம் பரமூர்த்தி'

என்று திரிகூடராசப்பக் கவிராயரும் குறிப்பிடுகிறார். ஆதலால் நாம் அனைவரும் நமக்கு உதவிசெய்யும் கண்ணுக்குத் தெரியும் தாய் தந்தையர் முதலிய மனிதர்களுக்கும், நமக்கு அவர்களைக்கொண்டு நன்மையைச் செய்துவரும் கண்ணுக்குப் புலனாகாத கடவுளுக்கும் நன்றிசெலுத்தவேண்டியது மிகவும் அவசியமாகும். எந்தநன்மையை மறந்தாலும் ஒருவர்செய்த நன்மையை மறக்கக்கூடாது. இதனைத் தான் திருவள்ளுவர்,

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வுஇல்லை
செய்நன்றி கொன்ற மகற்கு ''

என்று அருளிச்செய்தார்.

ஆகவே நாம் தாய் தந்தையர்க்கும், கடவுளுக்கும் எப்படி நன்றி செலுத்துவது? அதுதான் வழிபாடாக மலர்ந்தது. வழிபாடு என்ற சொல்லுக்குப் பொருள் வழியின் பெருமை என்பதாகும். வழிபடுதல் என்றால் பெரியோர்கள்சென்றவழியிலே பொருந்துதல் என்பது பொருளாகும். பெரியோர் காட்டிய வழியிலே சென்று அதன் பெருமையை உணர்ந்துகொள் என்பது இதன் சிறந்த பொருளாகும், வழிபாடு இறைவனுக்காக அல்ல; நமக்காகத்தான். நாம் அறிவும் பண்பாடும் அமைதியும் வழிபாட்டினால்தான் பெறுகிறோம். "வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான் '' என்ற மணிவாசகர் மணிமொழியிலும்,

"பொன்னால் பிரயோசனம் பொன்படைத்
தார்க்குண்டு, பொன்படைத்தோன்
தன்னால் பிரயோசனம் பொன்னுக்கு
அங்கேதுண்டு அத்தன்மையைப் போல்

உன்னால் பிரயோசனம் வேணதெல்லாம்
உண்டு உனைப்பணியும்
என்னால் பிரயோசனம் ஏதுண்டு
காளத்தி ஈச்சுவரனே ''

என்று பட்டினத்தார் வாக்கிலும் வந்தமைகண்டு உண்மையுணர்ந்து வழிபடல் வேண்டும்.

இங்ஙனம் ஆன்ம வளர்ச்சிக்கும் மண்ணில் நல்ல வண்ணம் வாழும் உலகியல் வாழ்விற்கும் விரைவில் தீயதெல்லாம் ஆழ்ந்து அரன் நாமமே சூழ்ந்து, வையகம் துயர் தீர்ந்து நன்மைபெறுவதற்கும் துணைபுரியும் வழிபாட்டின் சிறப்பினை அறிந்து மக்களனைவரும் நாளும் வழிபட்டு, வளம்பல பெற்று நலமுடன் வாழ்வார்களாக.

கரவின்றி நன்மாமலர் கொண்டு
இரவும் பகலும் தொழுவார்கள்
சிரமொன்றிய செஞ்சடையார் வாழ்
வரமா மயிலாடுதுறையே.

அஞ்சொண் புலனும் அவைசெற்ற
மஞ்சன் மயிலாடுதுறையை
நெஞ்சொன்றி நினைந்தெழுவார்மேல்
துஞ்சும் பிணியாயின தானே.

அவ்வதிசை யாரும்அடி யாரும்உள ராகஅருள் செய்துஅவர்கள்மேல்
எவ்வமற வைகலும் இரங்கிஎரி யாடும்எமது ஈசனிடமாம்
கவ்வையொடு காவிரி கலந்துவரு தென்கரை நிரந்து கமழ்பூ
மவ்வலொடு மாதவி மயங்கிமணம் நாறு மயிலாடுதுறையே.

— திருஞானசம்பந்தர்.

நிலைமை சொல்லு நெஞ்சேதவம் என்செய்தாய்
கலைகள் ஆயவல் லான்கயி லாயநன்
மலையன் மாமயி லாடு துறையன்நம்
தலையின் மேலும் மனத்துளும் தங்கவே.

— திருநாவுக்கரசர்.

# கோவண ஆடையர்

செந்தமிழ்ச்செல்வர்,

திரு. கி. வா. ஜகந்நாதன் எம். ஏ.

திருநெல்வாயில் என்பது ஒரு தலம். அதை இக்காலத்தில் சிவபுரி என்று வழங்குவர். அங்கே கனகாம்பிகை உடனாகிய உச்சிநாதேசுவரர் திருக்கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கிறார். அவரைத் தரிசனம்செய்து பாடுகிறார் திருஞானசம்பந்தர்.

நெற்பயிர் தழைத்துவளரும் அந்தத்தலத்தில் நீர்வளம் நிரம்பி இருக்கிறது. பளிங்குபோலத் தெளிந்தநீர் மடைவழியே வயல்களுக்கும் பாய்கிறது. அந்த நீரில் நண்டுகள் அச்சமின்றி உலவுகின்றன. எந்தப்பக்கம் பார்த்தாலும் நண்டுகளைக் காணலாம். அவற்றின் காற்சுவடுகள் அங்கங்கே காணப்படுகின்றன. வயற்பக்கங்களில் நண்டுகளின் காற்சுவடுகள் தோன்றும் மடைகளும், அதில் நிரம்பிய நீரும் காட்சியளித்து, இது நெற்பயிர் வளர்வதற்கு ஏற்ற இடம் என்பதைப் புலப்படுத்துகின்றன.

புடையின் ஆர் புள்ளி கால் பொருந்திய
மடையின் ஆர் மணிநீர் நெல்வாயிலார்

அந்தப் பெருமான் கச்சமாக ஆடையை அணிந்திருக்கிறார். அந்தக் கச்சம் பட்டையாக நான்கு விரல் அகலம் இருக்கிறது. நடக்கும்போது அந்தப் பஞ்சகச்ச ஆடை அசைகிறது. அதை விரும்பி அணிந்து இருக்கிறார்.

நடையில் நால்விரல் கோவணம் நயந்த
உடையினர்.

அந்தப் பெருமானைத் தம் உச்சிமேல் வைத்துத் தொழுகிறார் ஞானசம்பந்தர்.

எமது உச்சியாரே.

ஊருக்குள் புகும்போதே வயல்களும், மடைகளும், நண்டுகளும் காட்சியளிக்கின்றன. அந்த இயற்கை வளத்தைக் கண்டுகளிக்கிறார் சம்பந்தப் பெருமான். நீருயர நெல் உயரும் ஆதலால் இத்தகைய நீர்வளம் பெற்ற தலம் நெல்வயலாக விளங்குவது இயல்பே.

ஆடையைக் கொய்து நான்கு விரலளவுக்குக் கச்சத்தை அமைத்துக் கட்டியிருக்கிறார் சிவபெருமானார். அந்தணர்கள் பஞ்ச கச்ச ஆடை உடுத்துபவர்கள். சிவபெருமான் அநாதி அந்தணர் ஆதலின் அவ்வாறு உடுத்தியிருக்கிறார். அந்தணர்கள் எவ்வாறு உடுத்தவேண்டும் என்பதைக் காட்டுவார்போல அவர் உடுத்தி இருக்கிறார். அவரை உச்சிமேல் வைத்து அடியார்கள் கும்பிடுவதனால் தான் உச்சிநாதேசுவரர் என்ற திருநாமம் அவருக்கு அமைந்தது போலும்.

புடையின் ஆர்புள்ளி கால்பொ ருந்திய
மடையின் ஆர்மணி நீர் நெல் வாயிலார்
நடையில் நால்விரல் கோவ ணந்நயந்
துடையி னாரெம துச்சியாரே.

வயற்பக்கங்களில் உள்ள நண்டுகளின் காற்சுவடுகள் பொருந்திய மடையில் நிரம்பிய பளிங்கு போன்ற நீரை உடைய திருநெல்வாயில் என்னும் தலத்தில் நித்தியவாசம் செய்யும் பெருமானார், நடக்கும் போது நான்கு விரலளவு கச்சங்கொண்ட கோவண ஆடையை விரும்பி அமைத்துக் கொண்ட உடையை உடையவர், எம்முடைய தலையின்மேல் வணங்குதற்கு உரியவராக இருப்பவர்.

[புடையின் - பக்கங்களில்; மடை முதலியவற்றைச் சொல்வதனால் வயற்பக்கங்களில் என்று கொள்க. ஆர் - தங்கிய, புள்ளி - நண்டுகள், கால் - காற்சுவடு; ஆகுபெயர், மடையின் ஆர் - மடைகளில் நிரம்பிய, மணி நீர் - பளிங்குபோன்ற நீர், நீர- நீரை உடைய, நடையில் - நடக்கும் நடையில் விளங்கும். நால் விரல் கோவணம் - நான்கு விரலளவுள்ள கச்சம்; கோவணந்நயந்த ; செய்யுளை நோக்கி நகரம் இரட்டித்தது; விகாரம் நயந்த உடையினர்; தொகுத்தல் விகாரம்; நான்கு விரலளவுள்ள கௌபீனத்தையே தாம் நயந்த உடையாகக் கொண்டவர் என்றும் பொருள் கொள்ளலாம். எமது என்ற பன்மை அடியாரையும் உளப்படுத்திச் சொன்னது; பெருமிதம் பற்றிச் சொன்னதாகவும் கொள்ளலாம், உச்சியார் - உச்சி மேற்கொள்ளும் மேன்மையை உடையவர் என்றும் ஆம், ஏகாரம் ஈற்றசை.

வளம் பொருந்திய ஊரில் எளிய உடையை உடுத்துத் தோன்றி னும் நம் உச்சிமேற்கொண்டு வணங்கும் பெருமானார் என்ற கருத்துக் குறிப்பிக்கப்பெற்றது.

இரண்டாம் திருமுறையில் வரும் பதிகத்தில் முதற்பாட்டாக அமைந்தது இது.

# இந்தியத் தத்துவச் சிறப்பு

சித்தாந்தப்புலவர்மணி,

திரு. ந. ரா. முருகவேள் M. A., M. O. L.

இந்தியத் தத்துவம், மிக்க பழமையும் சிறப்பும் வாய்ந்தது. இந்திய நாகரிகத்தைப் போலவே, இந்தியத் தத்துவக் கருத்துக்களும், பலராலும் வியந்து புகழ்ந்து பெரிதும் போற்றப்பட்டுள்ளன. இந்திய நாகரிகச் சின்னங்கள் உருசியாவிலும், சைபீரியாவிலும், (Russia & Siberia) பல பகுதிகளில் காணப்படுகின்றன. வட ஐரோப்பாவில், இந்து மன்னர்கள் செய்து வந்ததைப் போன்று, அசுவமேத வேள்விகள் நடத்தப்பெற்று வந்தமைக்குரிய சான்றுகள் கிடைத்துள்ளன. இந்தியத் துறைமுகங்களிலிருந்து வெளிநாடுகளுக்குச் சென்ற கப்பல்கள், வெறும் வாணிபப் பொருள்களைமட்டுமே அன்றி, கலை இலக்கியப் பண்பாட்டுத் தூதுவர்களையும்கூட, வெளிநாட்டு அரசப் பேரவைகளை அணி செய்வதற்கு, அழைத்துக் கொண்டு சென்றன.

லிதுவேனிய நாட்டில் இன்றும்கூடப் பல இந்து சமயச் சடங்குகளும், பழக்க வழக்கங்களும், கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. லிதுவேனிய நாட்டில் ஓடும் தப்தி (Tabti), நெமுனு (Namuna), சுரோபதி (Srobati), நர்புதே (Narbudey) என்னும் நதிகளின் பெயர்கள், முறையே **தபதி**, **யமுனை**, **சரசுவதி**, **நர்மதை** என்னும் இந்திய நதிகளின் பெயர்களைத் தழுவியே அமைந்திருக்கக் காண்கின்றோம். இங்ஙனமே லிதுவேனிய இனப்பெயர்களாகிய குரு, புரு, யதவ், சுதன் என்னும் பெயர்களும்; இந்திரா, வருணு, புரகன்யா (பர்ஜன்யன்) என்னும் கடவுளர்களின் பெயர்களும் இந்தியப் பெயர்களைத் தழுவியே அமைந்துள்ளன.

பாரசீகம் துருக்கி அலெக்சான்டிரியா என்னும் மூன்று இடங்களும், பண்டைக் காலத்தில் உலகின் பல நாடுகளைச் சேர்ந்த அறிஞர்கள், சமயம் தத்துவம் அறிவியல் முதலியனபற்றிய தங்கள் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வதற்கு உரிய, முதன்மையான மைய இடங்களாகத் திகழ்ந்தன. அவ்விடங்களில் இந்திய அந்தணர்கள் பலர் இருந்து வந்தனர் என்பதற்குக் கிரேக்க பாரசீக பராம்பரியங்கள் சான்று பகர்கின்றன. இவ்வுண்மையினை மாக்சுமுல்லர், கார்பே, விண்டர்னிட்சு போன்ற பேரறிஞர்களின் ஆராய்ச்சிகளும் வலியுறுத்துகின்றன.

உலகின் எல்லாப் பொருள்களும் நீரில் இருந்தே தோன்றுகின்றன என்று தேல்சும் (Thales, 600 B. C.), எல்லையற்ற ஆகாயத்தினின்றே யாவும் தோன்றின என்று அனக்சிமாண்டரும் (Anaximander), காற்றிலிருந்தே எல்லாப் பொருள்களும் தோற்றமுற்றன என்று அனுக்சிமெனிசும் (Anaximenes) போன்ற கிரேக்கப் பேரறிஞர்கள் கூறிய தத்துவக் கருத்துக்கள், நம்முடைய இந்தியத் தத்துவ நூல்களை அவர்கள் கற்றிருந்தனர் என்பதனைப் புலப்படுத்துகின்றன. "எல்லாப் பொருள்களும் நெருப்பின் பரிணமங்களே; எல்லாப் பொருள்களும் நெருப்பினின்றே தோன்றின; பின்னர் அதனிடமே திரும்புகின்றன" என்று இராக்ளிடசு (Heraclitus, 500 B. C.) கூறுவது, சாந்தோக்கிய உபநிடதத்திலும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

"பொருள்கள் என்றும் உள்ளவை, அழிக்க முடியாதவை" என்று எம்ப்பிடாக்ள்சு (Empedocles, 450 B. C.) கூறியிருப்பது, நமது இந்திய நாட்டில் சாங்கிய தத்துவம் கூறும் சற்காரிய வாதமேயாகும். இவ்வாறே சனோஃபான்சு (Zenophanes, 450 B. C.) என்பவர் "கடவுளும் உலகமும் ஒன்று; அவைகள் மாறுதலற்ற நித்தியப் பொருள்கள்" என்று கூறுவதும், நம்முடைய இந்திய நாட்டு அத்வைதக் கொள்கையையே வலியுறுத்தி நிற்கின்றது. பித்தாகரசு (Pythogoras, 580 B. C.) என்னும் பேரறிஞர் "மறுபிறவி உண்டு" என்பது அவர் இந்தியத் தத்துவ நூல்களைப் பயின்றிருந்தார் என்பதனை வெளிப்படுத்துகின்றது. அவரது புகழ்பெற்ற 47 ஆம் தேற்றம், போதாயனரின் சுலுவ சூத்திரங்களில் ஒன்றாகக் காணப்படுகிறது, சாங்கிய தத்துவக் கொள்கைகளுக்கும், பித்தாகரசின் தத்துவக் கருத்துக்களுக்கும் இடையே உள்ள ஒப்புமைகளை, சோன்சு (Jones), கோல்புருக் (Colbrooke), ஷ்ரேடர் (Schrader) முதலிய அறிஞர்கள் விரிவாக விளக்கியுள்ளனர்.

புகழ்மிக்க கிரேக்க ஞானியாகிய சாக்ரடீஸ் (கி. மு. 469 – 399) வாழ்ந்துகொண்டிருந்த காலத்தில், "இந்திய அறிஞர்கள் ஏதன்சு நகரத்திற்குச் சென்றுவரும் வழக்கம் இருந்தது" என்று மாக்சுமுல்லர் குறிப்பிடுகின்றார். சாக்ரடீஸ் தம்முடைய தத்துவக் கொள்கை, மனித வாழ்க்கைபற்றி ஆராய்வதுதான் என்று தெரிவித்தபோது, இந்தியத் தத்துவஞானி ஒருவர் அதனைக் கேட்டுப் புன்முறுவல் பூத்து, "முதலில் தெய்விகப் பொருள்களைப் புரிந்து கொள்ளாத எவரும், மனித இயல்புகளை அறிந்து கொள்ளுதல் இயலாது" எனக் குறிப்பிட்டார் என்று, மாக்சுமுல்லர் வரைந்துள்ளார். சாக்ரடீஸின் சிந்தனைகள், இந்தியத் தத்துவக் கருத்துக்களால்

எத்துணை ஆக்கம் பெற்றது என்று உன்னித்து உணர்வதற்கு, இச்செய்தி ஒன்றே அமையும்.

சாக்ரடீஸின் மாணவராகிய பிளாட்டோ (Plato, 427 - 347 B. C.) என்பவர், மறுபிறவிகள் (Metempsychosis) உண்டென நம்பினர். அவரது கருத்துக்கள் பல, சாங்கியத் தத்துவக் கருத்துக்களோடு பெரிதும் ஒத்துள்ளன. தேரிழுக்கும் குதிரைகளும், தேரோட்டும் சாரதியும் பற்றிய பிளாடோவின் உவமையானது, "உடம்பு ஒரு தேர்; ஆன்மா அத்தேரின் சாரதி; ஐம்பொறிகள் தேரில் மாட்டப்பட்ட குதிரைகள்; மனம் அவற்றின் கடிவாளம்" எனவரும் கடோபநிடதக் கருத்தைத் தழுவி அமைந்துள்ளது. அவர் குடியரசு (Republic) என்னும் நூலில் தெரிவித்துள்ள கருத்துக்கள் பல, இந்திய வேதாந்த நூல்களின் எதிரொலிப்பேயாகும். குடியரசு என்னும் நூலின் 7 ஆம் பகுதியில், பிளாட்டோ கூறிய குகை உவமை, இந்திய நினைவை ஏற்படுத்துகின்றது. இத்தகைய ஒப்புமைகள் தற்செயலாக அமைந்தவை அல்ல என்று **இராலிங்சன், மாக்சுமுல்லர், ரிச்சர்ட்கார்பே** முதலிய ஆராய்ச்சி அறிஞர்கள் வலியுறுத்துகின்றனர்.

கி. மு. 3 - ஆம் நூற்றாண்டின் இறுதியில், எகிப்திய நாட்டுத் தாலமி (Ptolemy) அரசர்களது ஆட்சியின் கீழ் அலெக்சாண்ட்ரியா நகரம், மிகவும் புகழ்பெற்ற கல்வி கலைப் பண்பாட்டு நகரமாக விளங்கியது. அங்கே இந்திய அந்தணர்களும் பௌத்தர்களும் நிரம்பச் சென்று வாழ்ந்திருந்தனர். அவர்களால் கிறித்தவ ஞானக் கொள்கையும் (Gnosticism), புதிய பிளாட்டானியக் கொள்கையும் (Neo - Platonism) ஆக்கம்பெற்றன. பிளினி (Pliny) என்னும் அறிஞர், தம்முடைய இயற்கை வரலாறு (Natural History) என்னும் நூலில் சிரியா, பாலஸ்தீனம், எகிப்து ஆகிய நாடுகளில், இந்தியப் பௌத்தர்கள் மிகுதியாகச் சென்று குடியேறி வாழ்ந்து வந்தனர் எனக் கூறுகின்றார்.

அலெக்சாண்ட்ரிய நகரத்தில், மகாயானப் பௌத்தக் கொள்கைகள் பல பரவியிருந்தன. புதிய பிளாட்டானியக் கொள்கையின் தலைசிறந்த விளக்குநர் ஆகிய பிளாட்டினஸ் (Plotinus) என்பவர், இந்திய ஞானிகளின் மெய்யுணர்வு நூல்களைக் கற்பதில் மிகவும் ஈடுபாடு கொண்டிருந்தார். அவர்தம் ஞானாசிரியராகிய அம்மோனியஸ் (Ammonius) துறவு வாழ்க்கையை மேற்கொண்டு தியானத்திலேயே பெரிதும் அழுந்திச் சமாதிநிலை கைவரப் பெற்றிருந்தார். உண்மை – நன்மை – அழகு (Truth – Goodness – Beauty) என்று பிளாட்டினஸ், கடவுளைக் குறிப்பிடுவது,

உபநிடதங்கள் சத்து - சித்து - ஆனந்தம் (சத்தியம் - சிவம் - சுந்தரம்) என்று இறைவனைக் குறிப்பிடுவதைப் போல உள்ளது. மற்றும் அவர், "இறைவனை இன்ன தன்மையன் என்று நம்மாற் கூறொணுது; ஆனால் இன்ன தன்மையன் அல்லன் என்று நாம் கூறுதல் இயலும்" என்று குறிப்பிட்டிருத்தல், உபநிடதங்கள் இறைவனை இது அன்று (நேதி, நேதி) என்று அன்மைச்சொல் லினுற் கூறுதலை நினைவூட்டுகின்றது.

இந்தியப் பண்பாட்டின் வளர்ச்சிக்கும், விரிவுக்கும், பௌத்த மதம் ஒரு பெரும் தூண்டுதலாகத் திகழ்ந்தது. புத்தர் பெருமானின் திருப்பெயர், அவர் மறைந்த ஒரு நூற்றுண்டுக்குப் பிறகு பாக்டீரியா நகரை அடைந்தது. கி. மு. முதல்நூற்றுண்டில் அங்கு பௌத்தர்கள் மிகுதியாக வாழ்ந்திருந்தனர் என்று, மாக்சுமுல்லர், மெக்கன்சி போன்ற அறிஞர்கள் கூறுகின்றனர்.

போர்ஃபைரி (Porphyry. 232 - 304 A. D) என்பவர், தமது ஞாஞசிரியராகிய பிளாட்டினஸைவிட, இந்தியச் சிந்தனையில் பெரிதும் ஈடுபாடு கொண்டவராக விளங்கினர். அவர் தம்முடைய நூலொன்றில், ஒரு பௌத்த மடத்தின் வாழ்க்கையமைப்புப் பற்றியும் மேற்கிந்தியக் குகைக்கோவில் ஒன்றில் தாம்கண்ட சிவபெருமானின் **அர்த்த நாரீசுவர வடிவம்** பற்றியும். மிக நுண்ணியமுறையில் விரிவாக விளக்கியுள்ளார். பௌத்தர்களைப் போலவே, அவர் கொலையையும் புலையையும் இகழ்ந்து ஒதுக்கியதுடன், சமயச் சடங்குகளில் கொலை வேள்விகள் கூடாதெனவும் வற்புறுத்தியுள்ளார்.

"கடந்த நாற்பது (40) ஆண்டுகளுக்கும் மேலாக, உலகில் பல்வேறு பெருமதங்களையும் பற்றி ஆராய்ந்தறிந்த பிறகு, **இந்துமதம்** என்னும் பெயரால் வழங்கி வருகின்ற சிறந்தசமயத்தைப்போன்று நிறைவுடையதும், அறிவார்ந்ததும், ஆராய்ச்சி அனுபவங்களில் மிகுந்ததும், உயிருக்கு உய்வளிக்கக்கூடியதும் ஆகிய சிறப்புமிக்க மதம், வேறு பிறிது எதுவும் இல்லை என்று நான் உணருகின்றேன். இந்துமதத்தினை எவ்வளவுக்கெவ்வளவு உணருகின்ருேமோ, அவ்வளவுக்கவ்வளவு அதனை நாம் நேசிப்போம்; எத்துணைஅளவுக்கு நாம் அதனைப் புரிந்துகொண்டு நன்கினிது விளங்கிக்கொள் கின்ருேமோ, அத்துணையளவுக்கு அதனை நாம் பெரிதும் மதித்துப் போற்றி மகிழ்வோம்" என்று, **அன்னி வசந்தை** (Annie Besant) அம்மையார், அறிவுறுத்துகின்ருர். *

---

* "After a study of some forty years and more of great religions of the world, I find none so perfect none so scientific, none so Philosophical and none so

"இந்தியநாட்டின் கவிதை இலக்கியங்கள், தத்துவ நூல்கள் ஆகியவற்றை ஆராயும்பொழுது, அவைகளில் பொதிந்துள்ள உண்மைகள், மிகவும் சிறப்புடையவையாகக் காணப்படுகின்றன அவற்றின் உயரிய தத்துவக் கொள்கை நலங்களை, நம்முடைய ஐரோப்பிய அறிவுடன் ஒருங்குவைத்து ஒப்பிட்டுணரும்பொழுது, நாம் அதனை மண்டியிட்டு வணங்கவேண்டிய நிலையில் இருக்கின்றோம்" † என்று, **விக்டர்கசின்** என்னும் பேரறிஞர் கூறுகின்றார். இவைகளெல்லாம், நமது இந்தியத் தத்துவச் சிந்தனைகளின் பெருமாட்சிமையினை, நமக்குச் செவ்விதின் உணர்த்துகின்றன.

---

spiritual as the great religion known by the name Hinduism. The more you know it, the more you will love it; the more you try to understand it, the more deeply will you value it"

—Dr. Annie Besant.

†"When we read with attention, the poetical and philosophical movements of the East, above all, those of India, which are beginning to spread in Europe, we discover there so many truths, and truths so profound, and which make such a contrast with the meanness of the results at which the European genius has sometimes stopped, that we are constrained to bend the knee before that of the East, and to see in this cradle of the human race, the native land of the highest philosophy."

—Dr. Victor Gousin.

தருமபுரம்

# ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணி மன்றம்

**மாயூரத்தில் :**

ஸ்ரீ குருஞான சம்பந்தர் பணிமன்றத்தின் மாயூரம் கிளையின் சார்பில் 19—10—80 ஞாயிறன்று மாயூரம் அருள்மிகு மாயூரநாத சுவாமி சந்நிதியில் அமைந்துள்ள தருமையாதீனக் கட்டிடத்தில் பாலர் பள்ளி தொடங்கப்பட்டுள்ளது. சமய உணர்வோடு கூடிய தொடக்கக்கல்வி அமையவேண்டும் என்பது இதன் நோக்கம். இவ் விடத்திலேயே இலவச மருத்துவமனையும் அமைக்கப்பட்டுள்ளது. தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் குத்து விளக்கேற்றிப் பாலர் பள்ளியினையும் இலவச மருத்துவ மனையையும் தொடங்கிவைத்து ஆசியருளினார்கள். மாயூரத்திலுள்ள புகழ்பெற்ற மருத்துவர் எழுவர் இலவச மருத்துவத் தொண்டுசெய்து வருகின் றனர். இக்கிளைமன்றத்தின் சார்பாக வாரவழிபாட்டுக் கழகமும் அமைக்கப்பட்டு சிறப்பாக நடந்துவருகிறது.

**பூம்புகார் – மேலையூரில் :**

மேலையூரில் (பூம்புகாரில்) உள்ள சமய உணர்வுமிக்க பெருமக்கள் முயற்சியால் 17—10—80 வெள்ளிக்கிழமை இப்பணிமன்றக்கிளை தொடக்கப்பட்டு வார வழிபாடு நிகழ்த்தப்படுகின்றது. தீபாவளித் திருநாளை முன்னிட்டு ஏழை மக்களுக்கு இலவச உடைகள் வழங்கிச் சமுதாயப் பணி செய்துள்ளமை குறிப்பிடத்தக்க சிறப்புடையதாகும்; மேலும் சமய சமுதாய உணர்வோடு கூடிய பல பணிகளைச் செய்யத் திட்டமிட்டுள்ளனர்.

**திருத்துறையூரில் :**

ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குத் தவநெறி அருளிய தலமும் ஸ்ரீ அருணந்தி சிவாசாரியாரின் குருமூர்த்த ஆலயம் விளங்குவதும் ஆகிய திருத்துறையூரில் இப்பணிமன்றக் கிளை 2—11—80 ஞாயிறு அன்று தொடங்கப்பட்டது. ஒவ்வொரு மாதத்திலும் பூரத்திருநாளில் மன்றச் சார்பில் வழிபாடும் உழவாரத்தொண்டும் சமயப் பிரசாரமும் நிகழ்த்தப்பட இருக்கிறது. உள்ளூர்ப் பெருமக்களும், பேராசிரியர் களும் கலந்துகொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.

# மன்றத்தின் நோக்கமும் பணிகளும்

1. தருமையாதீன முதற் குரவராகிய ஸ்ரீ குருஞானசம்பந்தரின் வழிநின்று, சமய வளர்ச்சிக்கும் சமுதாய நலத்திற்கும் ஆக்கபூர்வமான பணிகளைச் செய்தல்.

2. வேதம், ஆகமம், புராணம், இதிகாசம், திருமுறை, சித்தாந்த சாத்திரங்கள் போன்ற சமய, அற, நீதிச் சார்புடைய நூல் கருத்துக்களைப் பரப்புதல்.

3. திருக்கோயில்களையும், திருமடங்களையும் பேணிச் செப்பனிடுதல், திருக்கோயில்களுக்குக் குடமுழுக்குச்செய்வித்தல், திருக்கோயில் இல்லாத இடங்களில் அதனை அமைத்தல், நித்திய நைமித்திக வழிபாடுகள் சரிவர நடைபெறத் துணைபுரிதல், பொதுமக்கள் வழிபாட்டிற்கு உரிய வசதிகள் செய்யத் துணைபுரிதல், சமய சமூக விழாக்களின் வரலாறு — தத்துவங்களைப் பொதுமக்களுக்கு விளக்குதல், விழாக்காலங்களில் அவர்கட்கு வேண்டிய உதவிகள் செய்தல்.

4. சமயக் கருத்துக்களைப் பரப்பும்வகையில் நாள், வார, திங்கள் இதழ்கள், துண்டுப் பிரசுரங்கள், மற்றும் சமய நூல்கள் போன்றவற்றை அச்சிட்டு வழங்குதல்.

5. சமயஉணர்வோடு மாணவ மாணவியர் உருவாகும்வகையில், பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், தொழிற்கூடங்கள் முதலியவற்றை நிறுவி நடத்துதல், முன்னரே இயங்கிவரும் இத்தகு நிலையங்கள் மேலும் வளர்ச்சிபெற உதவுதல்.

6. திக்கற்றோர்க்கு அன்பில்லங்கள், நோயுற்றோர்க்கு மருத்துவமனைகள், ஆதரவற்றோர்க்கு விடுதிகள், ஊனமுற்றோர்க்குக் காப்பகங்கள் முதலியன நிறுவிப் பராமரித்தல். வெள்ளம், புயல் போன்ற இயற்கை இன்னல்கள் ஏற்படுங்காலத்தில் மக்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தல்.

7. இயல், இசை, நாடகம், சிற்பம், சித்திரம் முதலிய கலைகளிலும், விஞ்ஞானம் மற்றும் தொழிற்கல்வி போன்ற துறைகளிலும் நல்லறிஞர்களை உருவாக்கவும் இத்துறைகளில் ஆய்வுமேற்கொள்ளவும் உதவுதல்.

8. ஸ்ரீ குருஞான சம்பந்தர் பணி மன்றத்தின் கிளைகளை நாடெங்கிலும் நிறுவிச் சமய — சமூகப் பணிகள் செய்தல்.

9. நாடெங்கிலும் தனித்தனியே இயங்கிவரும் இத்தகைய அமைப்புகளின் தனித்தன்மையை மதித்து ஒருசில பொது அடிப்படையில் அவற்றையும் இம்மன்றத்துடன் இணைத்துக்கொண்டு செயற்படுதல்.

# திருக்கலயநல்லூர் திருக்கருக்குடித் தலச்சிறப்பு

மாயூரம் பள்ளித் துணை ஆய்வாளர்,

**வித்துவான் திரு. காளிங்கராஜ் எம் ஏ, பி, லிட்., பி. டி.**

## 1. திருக்கலயநல்லூர்

அரிசிலாற்றின் தென்கரையில் அமைந்துள்ள திருக்கலயநல்லூர் என்றதலம் இன்று சாக்கோட்டை என வழங்கப்படுகின்றது. சுந்தரர் பெருமானால் பாடப்பெற்றதலம். கும்பகோணத்திலிருந்து மன்னார்குடி செல்லும் பாதையினருகிலேயே திருக்கோயில் அமைந்துள்ளது. எளிதில் சென்றடையலாம்.

**தலச்சிறப்பு :**

சுந்தரர் தம் பதிகத்தில் பழைய வரலாறுகளை வினாவிடை முறையில் அமைத்தும் இயற்கை வனப்புக்களை எழில்பெறவைத்து விளக்கியும் பாடியுள்ளார். இப்பதிகத்தின் காலம் 8 ம் நூற்றாண்டு எனவே 12 நூற்றாண்டுகட்கு முன்னர் இக்கோயில் வளம்பொருந்திய வயல்களிடையே மண்டபமும் மாளிகையும்சூழ இருந்தது என்பது தெளிவாகிறது. இன்று இக்கோயில் இருக்குமிடத்தில் ஊர் இல்லை. பழங்காலத்தில் இக்கோயிலைச்சுற்றிப் பெரியகோட்டை இருந்தது. அதனால்தான் இன்றும் மக்கள் இக்கோயிலைக் கோட்டைச் சிவன் கோயில் என்று வழங்குகின்றனர். இக்கோட்டையின் சுவர்கள் பெருமேடாக, இன்று செவ்வகவடிவில் உள்ளது. கோட்டைமேட்டில் தென்னைமரங்கள் வளர்க்கப்பட்டுச் சோலையாக உள்ளது. கொத்தள மேடுகள் மிகஉயரமாக உள்ளன. இருபுறமும் செங்கற் சுவர் எடுக்கப் பட்டு நடுவிடம் மண்நிரம்பிய கோட்டையாக இருந்திருக்கவேண்டும். இக்கோட்டைக்குக் கிழக்குநோக்கிய ஒரேவாயில்தான் உள்ளது. இக் கோட்டைக்கு வெளிப்புறம் ஓர் அகழியும் உட்புறமும் ஓர் அகழியும் உள்ளது விந்தையானது. பேரரசரின் தலைநகருக்குக்கூட ஓர் வெளிப்புற அகழிமட்டுமே சாதாரணமாக உண்டு. ஆனால் திருக் கலயநல்லூர்க் கோட்டைக்கு உள்ளும் புறமுமாக இரண்டு சுற்று அகழிகள் இருப்பதைநோக்குமிடத்து இக்கோட்டை சோழர்காலத்தில் பண்டாரங்கள் ( அரசின் முக்கிய கருவூலங்கள் ) சேர்த்துவைக்கும்

இடமாக இது பயன்பட்டதுபோலும். நின்றியூர், திருந்துதேவன் குடிக்கோயில்களைச் சுற்றி அகழிகள் இருக்கின்றன. ஆனால் இத் துணைக் காவல் நிறைந்தது வேறெங்கிலும் இல்லை. அதனால்தான் சுந்தரர் "மண்டபமும் கோபுரமும் மாளிகையும் சூளிகையும்...... நிறை வெய்தி" எனக் குறித்துப்போந்தார்போலும். இன்று இக் கோட்டையினுள் சில எளிய வீடுகள் தவிர வேறொன்றும் இல்லை. கோயில்மட்டுமே உள்ளது திருஞானசம்பந்தர் இப்பகுதியில் சாக்கியர் (பௌத்தர்) வாழ்வதாகக் கருக்குடிப்பதிகத்தில் குறிப்பிட்டுள்ளதை நோக்குமிடத்து இதுசாக்கியர்கோட்டையாக இருந்து பின்னர் மருவிச் சாக்கோட்டையாகத் திரிந்து இருக்கலாம்.

## புராண வரலாறு :

இத்தலத்தினைக்குறித்ததாக மூன்று புராணவரலாறுகள் கூறப் படுகின்றன. ஒன்று ஊழிக்காலத்தில் உயிர்களை அடக்கிய கலசம் இங்குத்தங்கியது என்றும் அதனால் இதுகலயநல்லூர் என்றுவழங்கப் படுகிறது என்றும் கூறப்படுகிறது. இரண்டாவது, இங்கு பிரமன் இறைவனைப்பூசித்துப்பேறுபெற்றான் என்பது, மூன்றாவது, இறைவன் உமையம்மையின் தவத்தினைக்கண்டு உவந்து அம்மைக்கு வரங்கொடுத்து, திருமணம் புரிந்துகொண்டான் என்பது, இச்செய்தி சுந்தரர் பாடலில் முதல் பாடலாக விளங்குகின்றது.

## மூர்த்திகள் :

இறைவன் பெயர் அமிர்தகலசநாதர். இறைவியின் பெயர் அமிர்த வல்லிநாயகி. தலவிருட்சம் வன்னிமரம். இன்று இல்லை.

## கோயிலமைப்பு :

இக்கோயில் கிழக்கு நோக்கிய சந்நிதியாக உள்ளது. முன்புறம் ஓர் மதிலும் வாயிலும் உள்ளன. அடுத்துள்ள முற்றத்தில் ஓர் நந்தியும் விழாமண்டபமும் உள்ளன. அதனை அடுத்து மூன்று நிலைகளோடு கூடிய சிறுகோபுரம் உள்ளது. எளிமையாக உள்ளது. இதனை அடுத்து நாயக்கர் காலச் செங்கல் மண்டபம் உள்ளது. இம்மண்டபத்தின் தூண்கள் கனமானவை. இம்மண்டபத்தின் வடபுறம் அம்மன் கருவறை தெற்குநோக்கியுள்ளது. இம்மண்டபத்தில் சுதையாலாகிய மீனாட்சி திருக்கல்யாணக் காட்சி உள்ளது. இம்மண்டபத்தின் முடிவில் பழைய வாயில் உள்ளது.

மகாமண்டபவாயிலில் வடபுறம் சிறிய அளவிலான தண்டாயுத பாணி உள்ளார். தென்பால் நர்த்தன விநாயகர் உள்ளார். இந்த

விநாயகர் எளிமையானகோலம் உடையவர். மகாமண்டபம் கருங்கல் திருப்பணி உடையது. தூண்களின் போதிகைகள் மிகப்பழையன வாகக் காட்சி அளிக்கின்றன. இம்மண்டபத்தின் கிழக்கில் நவக் கிரகங்கள் மேடையுள்ளது. தெற்குப்பக்கம் ஒரு மேடையில் நால்வர் திருமேனிகள் உள்ளன. சம்பந்தர் திருமேனி புதியது. மிகநீண்ட தலையணி உடையது. இங்கிருந்த அழகிய பழைய சம்பந்தர் திருமேனி இரண்டாக உடைபட்டுப்போகவே இத்திருமேனி செய்துவைக்கப் பட்டுள்ளது. பழைய சிலையின் தலைப்பகுதி பிராகாரத்தின் கீழ்பால் ஓர் மண்டபத்தில் கிடக்கின்றது. அத்தலைப்பகுதியில் தலையும் கைகளும் உள்ளன பால்வடியும் முகமும் திருத்தாளமும் கொண்ட அழகிய திருமேனியாக உள்ளது. இம்மகாமண்டபத்தின் தென்பால் சோமாஸ்கந்தமூர்த்திக்கான திருஉண்ணாழிகையும் வடக்கில் சந்திர சேகர மூர்த்திக்கான திருஉண்ணாழிகையும் உள்ளன. ஆடல்வல் லாருக்கும் இங்குக் கருவறை உள்ளது. அடுத்து முன்மண்டபம் உள்ளது இம்மண்டபத்தில் நந்தியும் பலிபீடமும் இருப்பதனால் பழங் கோயில் இத்துடன் முதலில் இருந்திருக்கவேண்டும். இம்மண்டபத்தில் இரு துவாரபாலகர்கள் சிலைகள் உள்ளன. நான்கு கைகளை உடைய வர்கள். விஸ்வமயமும் சூசிஹஸ்தமும் உடையவர்கள்.

அடுத்து அர்த்த மண்டபமும் திருஉண்ணாழிகையும் உள்ளன. கருவறையில் எளிமையான சிறிய சிவன் திருமேனியே உள்ளது.

திருச்சுற்றில் தெற்குப்பகுதியில் ஒரு உயரமான பெரிய செங்கல் மண்டபம் உள்ளது. இம்மண்டபத்தினை அடுத்துக் கோவில் சுவர்கள் இரண்டு விதமான கால அமைப்பில் உள்ளன. ஒருபகுதி முதல் இராஜராஜனுக்கு முந்தியும், பிறிதொரு பகுதி 12 ம் நூற்றுண்டின் பகுதியாகவும் விளங்குகின்றது. போதிகைகளின் அமைப்பு இதனைத் தெளிவாகக்காட்டுகின்றன. எனவே இராஜராஜனுக்கு முன்னர் இக் கோயில் கற்றளியாகக் கட்டப்பட்டது எனினும் பின்னர் 12 ம் நூற்றுண்டின் இறுதியில் மூன்றும் குலோத்துங்கனது காலத்தில் மீண்டும் புதுப்பிக்கப்பட்டது என்றும் தெரிகிறது. மீண்டும் 16 அல்லது 17 ம் நூற்றுண்டில் தஞ்சை நாயக்கமன்னர்கள் காலத்தில் புதுப்பிக்கப்பட்டது தெளிவாகத் தெரிகிறது.

தட்சிணாமூர்த்தித்திருமேனி பிற்காலத்தது. பழையது பின்ன முறவே புதியது வைக்கப்பட்டுள்ளது. பழையதின் கல்லால் மரப் பகுதிமட்டும் உள்ளது. தென்முகக்கடவுளின் வலமேற்கையில் அக்க மாலையும், இடமேற்கையில் அக்கினியும், வலக்கை சின்முத்திரையும், இடக்கை நூலும்கொண்டுள்ளது. தலையின் முடி சூரியபிரபைமாதிரி உள்ளது. ஒருவினோதமான தோற்றம். விமானத்தின் கூடுபகுதிகளில்

போர்க் காட்சிகள் உள்ளன. வீரன் பல நிலைகளில் போரிடுவது காணப்படுகிறது.

மேற்புறச் சுவரில் இலிங்கோத்பவர் உள்ளார் பச்சைக்கல்லில் வடிக்கப்பட்டது. மான்மழுவேந்தி அபயஹஸ்தமாகவும் கடிஹஸ்த மாகவும் உள்ள திருமேனி பாதத்தில் திருமால் மகுடமணிந்த வராக மாக உள்ளார். மேலேஅன்னம் உள்ளது. இருபுறமும்மாலும் அயனும் சுமார் இரண்டடி உயரத்தில் வணங்கி நிற்கின்றனர்.

மேற்குப்பிரகாரத்தில் மண்டபத்தில் சில திருமேனிகள் உள்ளன. மகாகணபதியும், அடுத்து பிருதிவிலிங்கம், அப்புலிங்கம், தேயுலிங்கம் என மூன்று இலிங்கங்களும் உள்ளன. அடுத்து வள்ளி தெய்வயானை யுடன் கூடிய முருகன் உள்ளான். 16ம் நூற்றுண்டுச் சிற்பங்கள். இருமேற்கைகளிலும் வச்சிரமும் சத்தியும் கொண்டு மயிலுடன் நிற்கின்ருன்.

இதனை அடுத்து அர்த்தநாரியின் சிற்பம் சுமார் நான்கடி உயரம் உள்ளது இதுமிகவும் அழகிய சிலை இச்சிலை இன்று இலிங்கோத்பவர் இருக்கும்இடத்தில் இருந்திருக்கவேண்டும். புடைச்சிற்பமாக உள்ளது சாதாரணமாக இராஜராஜனுக்கு முன்பு மேல்புறக் கோட்டத்தில் அர்த்தநாரியின் சிற்பம் வைப்பது வழக்கம். திருச்செம்பொன்பள்ளி, திருமணஞ்சேரி, சீனிவாசநல்லூர்க் கோயில்களில் அர்த்தநாரியே உள்ளது. மூன்ரும் குலோத்துங்கன்காலத் திருப்பணியின்போது இது அப்புறப்படுத்தப்பட்டு இங்கு வைக்கப்பட்டிருக்ககூடும்.

உமையொருபங்கர் இடக்காலை ஊன்றி வலக்காலை ஒய்வு கொடுத்துத் திரிபங்க நிலையில் விடையின்மீது சாய்ந்து உள்ளார். பெண்பாகத்திற்கேற்ப இடப்புறம் தலையலங்காரத்தில் மாற்றமும் பெரியதோடும் வனமுலையும் பெரிய இடுப்பும் பாதம்வரை துகிலும் உடுத்திப்பெண்மைமிகுந்தும், வலப்புறம் மிடுக்கும் மகரகுண்டலமும் அணிகளும் தொடையினளவினதான புலித்தோலும் கொண்டு விளங்குகிருர். வலமேற்கையில் மழுவும் இடமேற்கையில் தாமரை மலரும் கொண்டுள்ளார். கை தொடையில் ஊன்றியும் வலக்கையைக் காளையின் தலைமீது வைத்துக்கொண்டும் உள்ளார். பின்னல் காளை உள்ளது. இச்சிற்பம் ஓரளவு புடைச்சிற்பம். எனவே இது கருவறைச்சுவரில் பதிக்கப்பெற்றதேயாகும்.

அடுத்துத் 'தபஸ்வியம்மன்' என்ற பெயரில் ஓர் அழகான திருமேனி உள்ளது. "குரும்பைமுலை மலர்க்குழலி கொண்ட தவம் கண்டு" என்ற சுந்தரர் வாக்கினுக்காக இத்திருமேனி படைக்கப் பட்டிருக்கவேண்டும்.

இத்தவக்கோல அன்னை வலது காலைமட்டும் தரையில் ஊன்றி இடக்காலை மடக்கி வலது தொடையில் ஏற்றிப்பொருந்திட மடக்கிப் பதித்துப் பாதம் மேல்நோக்கிட நிற்கிருள். வலக்கரத்தினை உச்சிமீது உள்ளங்கை கவிழவைத்து இடக்கரத்தினைத் திருவயிற்றின் கீழ் அங்கை மேல்நோக்க வைத்து நேராகநின்று தவமியற்றுகிருள் இதில் உயர்ந்த ஜடாமகுடம் உள்ளது. புடைப்புச் சிற்பமாக உள்ளது.

இதனை அடுத்து நாயக்கர் காலத்ததான கஜலெட்சியும் சப்த மாதர் சிலைகளும் உள்ளன. சப்தமாதர்கள் சிலை ஒரேகல்லில் எழுவரும் புடைப்புச்சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது.

வடபால் கருவறைச்சுவரில் நான்முகன் உள்ளான் இவன் அக்க மாலை, அமிர்தகலசம் கொண்டு அழகுற உள்ளான். அடுத்துள்ள கொற்றவை பிற்காலத்தது ஆகும். முடிவடையாத கரடுமுரடான வேலைப்பாடுடன் உள்ளது. சண்டீசன் சடாமகுடதாரியாக உள்ளான். இச்சண்டியின் கோயில் பிற்காலத்தில் திருப்பணி செய்யப்பட்ட போது சிலகல்வெட்டுத்துண்டுகள் விதானத்தில் தலைகீழாகப்போடப் பட்டுக் கட்டப்பட்டுள்ளன. எழுத்தின் அமைதி மூன்றும் குலோத்துங்கனது காலத்தது ஆகும். இவ்வெழுத்துக்களைத்தவிர, இக்கோயிலில் கல்வெட்டுக்கள் ஏதும் இன்று இல்லை.

கீழ்பால் உள்ள மண்டபத்தில் சுமார் ஒன்றரை அடியுள்ள பைரவர், பிட்சாடனர், சூரியன், சனிபகவான் முதலிய சிற்பங்கள் உள்ளன. இவற்றுடன் ஒருதூணின் பகுதியாகச் சுமார் ஒன்றரை அடி உயரம் உள்ள ஒருமனிதனின் சிற்பம் உள்ளது. வட்டமான தாடியும் கூரிய மீசையும் கொண்டுள்ளான், வேட்டியினை மடித்துக் கட்டி நின்று கூப்பிய கரங்களுடன் உள்ளான். தலைக்கொண்டை பரந்துள்ளது இது போன்றுள்ள சிலை கருக்குடி, கழுக்காணிமுட்டம் முதலான பலஇடங்களில் உள்ளன இதுபோன்ற அமைப்புள்ள சிலை மூன்றும் குலோத்துங்கன் காலத்தது என இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளது எனவே இதுவும் மூன்றும் குலோத்துங்கன் சிலை யாகவே இருக்கலாம். கோயில் குலோத்துங்கனது காலத்திய திருப் பணியாக உள்ளது. இச்சிலையின் தாடி முடி அலங்காரம். கூரியமீசை, வேட்டிக்கட்டு, கோலம் முதலியன திருக்கருக்குடியிலுள்ளதைப் போலவே உள்ளன.

நண்புடைய நன்சடையன் இசைஞானி சிறுவன்
நாவலர்கோன் ஆரூரன் நாவில் நயந்துரைசெய்
பண்பயிலும் பத்துமிவை பத்திசெய்து பாட
வல்லவர்கள் அல்லலொடு பாவமிலர் தாமே.

## 2. திருக்கருக்குடி

திருக்கருக்குடி என்னும் தலம் இன்று மருதாந்தநல்லூர் என வழங்கப்படுகிறது. கும்பகோணத்திலிருந்து 6 கி.மீ. தொலைவில் மன்னார்குடி செல்லும் சாலையில் உள்ளது இவ்வூருக்கு வடக்கே ஏனாதிநாதநாயனார் பிறந்த ஏனநல்லூர் எனப்படும் எயினனூர் 2கி.மீ தொலைவிலுள்ளது. திருக்கருக்குடி எனும் இத்தலம் திருஞானசம்பந்தரால் பாடப்பெற்றது.

### மூர்த்திகள் :

இங்குள்ள இறைவனதுபெயர் தேவாரத்தில் கருக்குடிநாதர் என்று வழங்கப்பெறுகின்றது. கருக்குடிநாதர் என்ற பெயரோடு இன்று பிரம்மபுரீசுவரர், சற்குணலிங்கேசுவரர் என்ற பெயர்களும் இங்குள்ள இறைவனுக்கு வழங்கப்பெறுகின்றன. இறைவியின் பெயர் அத்வைதநாயகி என்றும், கல்யாணி அம்பிகை என்றும், சர்வாலங்கார அம்பிகை என்றும் அழைக்கப்படுகிறாள்.

### புராண வரலாறு :

இத்தலத்திறைவனைப் பிரமனும் இராமனும்வந்து வழிபட்டுய்ந்தனர் என்று கூறுவர். குறித்த நேரத்தில் வழிபாடுசெய்ய அனுமன் சிவலிங்கத்தினைக் கொண்டுவராமல் தாமதித்ததனால் இராமன் தன் அருகிலிருந்த மணலிலேயே இரண்டுகையாலும் சிவலிங்கம் பிடித்து வைத்து வழிபட்டார் என்றும், பின்னர் கொண்டுவந்த லிங்கமே திருக்கோயிலின் இடப்புறம் அமைந்துள்ள அனுமந்தலிங்கம் என்ற பெயரால் வைக்கப்பட்டது என்றும் கூறுவர்.

மற்றுமொரு வரலாறு இத்தலத்தில் வழங்கிவருகின்றது. ஒரு வணிகன் தன் சிற்றன்னையை அறியாது புணர்ந்தமையால் உண்டான குற்றம், இத்தலத்திறைவனை வணங்கியமையால் நீங்கப்பெற்றது என்று கூறுவர்.

### கோயிலமைப்பு :

கிழக்குநோக்கியசந்நிதி. இன்று கோபுரம் ஏதும் இல்லை. பண்டு சிறுகோபுரம் இருந்து பின்னமுற்று இடிந்திருக்கவேண்டும். இக் கோபுரவாயிலில் நிலைகளாக இருந்திருக்கக்கூடிய இரண்டு பெரிய பாறைநிலைகள் அம்மன் சந்நிதியில் அர்த்தமண்டபத்தில் விதானத்தில் உத்திரமாகப் போடப்பட்டுக் கட்டப்பட்டுள்ளன. கோயில் சிறிய கோயில். கிழக்குநோக்கியே இறைவன் இறைவி சந்நிதிகள் உள்ளன.

முற்றத்தினை அடுத்தே கோயில்தான். உயரமான கருவறை விமானங்கள் உள்ளன. கோயிலின் வாயிலில் தென்புறம் விநாயகரும் வடபால் கார்த்திகேயனை அடுத்து இடப்புறம் தனியாக ஓர் பெரிய சிவலிங்கமும் உள்ளன. இதனை அனுமந்தலிங்கம் என்று வழங்குகின்றனர். அனுமன் கொண்டுவந்த இலிங்கத்திருமேனி இதுவென்று சொல்லப்படுகிறது. ஒருகால் அருகில் சிதிலமாகிப்போன ஓர் கோயிலிலிருந்து கொண்டுவந்து இங்கு வைக்கப்பட்டிருக்கலாம்.

மகாமண்டபத்தில் இரண்டு சிறிய துவாரபாலகர்கள் சிலையுள்ளது. உட்கோயில் பழையது. 12 ஆம் நூற்றாண்டினதான போதிகைகள் அமைப்புள்ளன. கருவறையில் உள்ள சிவலிங்கத்திருமேனி மிகவும் சிறியது மண்ணினால் செய்யப்பட்டது. கல்லால் பீடம் அமைக்கப்பட்டுள்ளது மண்ணினைக் கையால் பிடித்துச்செய்த சுவடுகள் கூடத் தெரிகிறது. அரைஅடி உயரம்தான் ஆவுடையார் இருக்கும். இத்திருமேனி பழங்காலத்தில் ஓர் சான்றோரால் வைத்து வணங்கப்பட்டதாகவோ அல்லது சான்றோரின் அதிட்டானமாகவோ இருக்கக்கூடும். இதேபோல திருநீடூர்க்கோயில் திருமேனியும் திருப்புன்கூர் சிவலோகநாதன் திருமேனியும் மண்ணால் ஆனவையே.

திருச்சுற்றில் தேவகோட்டத்தில் முதலில் நர்த்தனவிநாயகர் உள்ளார். இருபுறமும் இரண்டு பூதகணங்கள் உள்ளன. கும்ப பஞ்சரங்கள் அழகுற அமைக்கப்பட்டுள்ளன. பூதவரிசைகள் நாட்டிய நிலைகளில் உள்ளன. ஒருதலையில் மூன்று உடல்கள் பொருந்த நாட்டியக்கோலச்சிற்பம் ஒன்று விந்தையாகஉள்ளது. அடுத்துள்ள தென்முகக்கடவுளின் உருவம்பெரியது. பரந்தமுகம். அருகில் இரண்டு முனிவர்களே உள்ளனர். மேலவிதானத்தில் வீணாதரதட்சிணாமூர்த்தி உள்ளார்.

மேற்கு மூலையில் தனியாகச் சிறிய 2 அடி உயரம் உள்ள வலம்புரி விநாயகர் சந்நிதியுள்ளது. இத்திருமேனி சோணாட்டின் கண்ணது. விநோதமாக மனிதன்போலவே உள்ளது. கரங்கள் இரண்டும் குறுகித் திருக்குறுக்கைக்கோயிலில் உள்ளதுபோல உள்ளது. மேற்குக் கருவறைச்சுவரில் லிங்கோத்பவர் உள்ளார். மேற்கு மண்டபத்தில் விநாயகர், முருகன் திருமேனிகள் உள்ளன. அதனை அடுத்து இரண்டு சிலைகள் உள்ளன. ஒரு சிலை அரசனுடையதாக இருக்கலாம். தலையில் மகுடம் பூண்டுள்ளான். வணங்கியகரம். வணங்கிய இடக்கரத்தின் இடுக்கில் உறையிலிட்ட நீண்டவாள் உள்ளது. வலப்புறம் கச்சையில் குத்துவாள் உள்ளது. அரசன் கம்பீரமாக உள்ளான். கொண்டை அலங்காரமாக உள்ளது. பெரிய தோடுகளை அணிந்துள்ளான். அவனுக்கருகில் உள்ள சிலை அவனுடைய அமைச்சன் போலும். வேட்டியினை மடித்துக்கட்டியதுபோல் உள்ளது. தலைமுடி விரிந்து பின்புறம் கிடக்கின்றது. அழகான உயிர்த்துடிப்புடன் கூடியசிலைகள்.

இறைவி சந்நிதி தென்பாலுள்ளது. அக்கோயிலில் இறைவியின் திருமேனிதவிர வேறு சிற்பங்கள் ஒன்றுமில்லை. இச்சந்நிதியின் எதிரே நின்றநிலையில் ஒரு மனிதன் கூப்பிய கரங்களுடன் நிற்கிறான். இச் சிலைக்கு சிறுமண்டபம் கட்டிவைக்கப்பட்டுள்ளது. இச்சிலை ஆதியில் இந்தஇடத்தில் இருந்திருக்கமுடியாது. திருக்கோயில் பகுதியில் வேறு இடத்திலிருந்து பின்னர் இங்கு வைக்கப்பட்டிருக்கவேண்டும். இச் சிலை 4 அடி உயரம் இருக்கிறது, இதனைத் தனஞ்சயசெட்டி என்பானது சிலைஎன்று கூறுகிறார்கள். இது சரியானதாகாது. இது போன்ற சற்றுச் சிறியசிலை கலயநல்லூர்க் கோயிலிலும் உள்ளது குறிப்பிடத்தக்கது. இச்சிலை திரிபங்கநிலையில் உள்ளது அழகிய தூக்கி முடிந்த கொண்டையுள்ளது. உருத்திராக்கமாலை அணிந்துள்ளான். பூணுல் கிடையாது. வட்டமான தாடியும், கூர்மையான மீசையும் உள்ளன முகத்தில் புன்முறுவல் மிக அழகாக உள்ளது. கூப்பிய கரங்களில் மலர்கள் உள்ளன. வேட்டியினை மடித்துக்கட்டியுள்ளான். இடுப்பில் கட்டிய துண்டு பறந்து கீழாகத் தொங்குகிறது. நீண்டு தொங்கும் செவிகள் உள்ளன. இச்சிலை சாதாரண ஒரு வணிகனுடைய தாக இருக்க முடியாது. சிலையின் அமைப்பும் சோழர்காலத்ததாகும்.

இக்கோயிலில் சில கல்வெட்டுக்கள் துண்டுகளாக அஸ்திவாரத் திலேயே உள்ளன. எல்லாம் இடம் மாறிக் கிடக்கின்றன. ஒன்றில் திரிபுவனச் சக்ரவர்த்திகள் குலோத்துங்கச்சோழதேவர் குறிப்பிடப் பட்டுள்ளார். இவர் மூன்றும் குலோத்துங்கனே என்னலாம். கல்வெட்டின் எழுத்தமைதிகளும் அக்காலத்தவையாகவே உள்ளன. எனவே 12ம் நூற்றுண்டில் கற்றளியாக்கப்பட்ட கோயில் பிறிதொரு காலத்தில் பிரித்துக் கட்டப்பட்டுத் திருப்பணி நடைபெற்றுள்ளது.

நனவிலும் கனவிலும் நாளும் தன்னொளி
நினைவிலும் எனக்குவந் தெய்து நின்மலன்
கனைகடல் வையகம் தொழுக ருக்குடி
அனலெரி யாடுமெம் அடிகள் காண்மினே.

எறிகடல் புடைதழு விலங்கை மன்னனை
முறிபட வரையிடை யடர்த்த மூர்த்தியார்
கறைபடு பொழில் மதிதவழ் கருக்குடி
அறிவொடு தொழும் அவர் ஆள்வர் நன்மையே.

கானலில் விரைமலர் விம்மு காழியான்
வானவன் கருக்குடி மைந்தன் றன்னொளி
ஆனசெய்ஞ் ஞானசம் பந்தன் சொல்லிய
ஊனமில் மொழிவலார்க் குயரும் இன்பமே,

———

கட்டுரை எண். 10.

# அபிராமி அந்தாதி

புலவர். திரு. K. சந்தானராமன், M. A., B. Lit.,
D. P. P. A., D. U. N. I. U.,

சுந்தரி, எந்தை துணைவி, என்பாசத் தொடரையெல்லாம்
வந்தரி சிந்துர வண்ணத்தினள், மகிடன் தலைமேல்
அந்தரி, நீலி, அழியாத கன்னிகை, ஆரணத்தோன்
கம்தரி கைத்தலத்தாள் மலர்த்தாள் என் கருத்தனவே. (8)

அ. என்பாசத் தொடரையெல்லாம் வந்தரி
சிந்துர வண்ணத்தினள்

(1) எனது பந்த பாசத் தொடர்களையெல்லாம் தானே எழுந்தருளி வந்து தீர்க்கும் சிவந்த நிற முடையவள்.

(2) பந்தபாசங்களை அழிப்பதால் அம்பிகையினை லலிதா சகஸ்ர நாமம் "பாசஹந்த்ரி" என்று போற்றுகிறது

(3) தனது பெற்றோரிடம் பாசம் - மனைவியிடம் பாசம் - மக்களிடம் பாசம் பேரக்குழந்தைகளிடம் பாசம் என்று சங்கிலித் தொடர்போல் வருவதால் 'பாசத்தொடர்' என்றார்.

(4) ஒருபொருளிடம் அல்லது ஒரு நபரிடம் வைக்கும் பாசம் விரிவடைந்து, தொடர்ந்து பல பொருள்கள்மேல் பாசமாக - பல நபர்களிடம் பாசமாக விரிவடைவதாலும் 'பாசத்தொடர்' என்றார்.

(4-A) ஆடையின்றி வாழும் 'அவதூத சுவாமி' களாக காட்டில் இருந்த ஒருவர் கோவணம் தரிக்கத் துவங்கினார். மாற்றுக் கோவணத்தை எலிதூக்கிச் சென்றது. அதனை அழிக்கப் பூனை வளர்த்தார். பூனைக்குப் பால்கொடுக்கப் பசுவாங்கினார். பசுவுக்குப் புல்கிடைக்கப் புல் நிறைந்த நிலங்களை வாங்கினார். நிலங்களைப் பாதுகாக்கப் பண்ணை அமைத்து, பரிவாரங்களை ஏற்படுத்தினார். அவற்றை நிர்வகிக்கும் காரியஸ்தனை நம்பாது சரிவர நடத்த பொறுப்புள்ள பெண்ணை மணந்தார். மக்களைப் பெற்றார். பேரப்பிள்ளைகளைப் பெற்றார். பின்னர் பலதரப்பட்ட இன்பதுன்பங்களில் இறைவனையே

மறந்தார். அவதூதர் 'ஆடம்பரி' ஆகிவிட்டார். பாசத்தொடர் வளர்வதை இராமகிருஷ்ண பரமஹம்சர் கிளைக்கதை மூலம் இவ்வாறு விளக்குகிறார்.

(5) பற்றற்ற துறவியொருவர் ஆற்றங்கரைக்குச் சென்றார். 'கர்ப்பிணி' மான் ஒன்று குட்டியினை ஈன்று இறந்துவிட்டதைக் கண்டார். இரக்கம்மேலிட மான்குட்டியை எடுத்துவந்து வளர்த்தார் தாயை இழந்த மான்குட்டிமீது பாசத்தைப் பொழிந்தார். கடைசியில் மரணத்தருவாயில் இருக்கும் பொழுதும் மான்குட்டியின் நினைவுடனேயே உயிரைவிட்டார். அதன் பலனாகத் தானே மானாகப் பிறந்தார். மனிதப்பிறவிக்கு உயர்ந்தவர் மீண்டும் விலங்கினமாகி வாழ்ந்தார். பின்னர் அடுத்த பிறவியில் மனிதராகி, 'ஜடபரதர்' என்ற பெயருடன் வாழ்ந்து, அலைந்து திரிந்து கடைசியில் ஞானியாகி நற்கதி யெய்தினார். இவ்வாறு சிறுபாசம் இரண்டு மூன்று பிறவித் தொடர் ஏற்படக் காரணமாகி விட்டது என்று வைணவ புராணம் பாகவதம் கூறுகிறது.

(6) அப்பாசத்தொடர் எவ்வாறு நாரதர் போன்ற ஞானிகளையும், பிறவியெடுக்கவும் மாயையில் சிக்கவும் செய்து விட்டது என்பதனை, தேவிபாகவதம் பலகதைகள் மூலம் விளக்கி அவற்றை நீக்க அன்னையின் அருளே வழிவகுக்கும் என்பதனையும் கூறுகிறது.

(7) ஆலாலசுந்தரரின் சிறுபார்வை கமலினி அநிந்திதையின் சிறுபார்வை மண்ணிற் பிறவியும் கண்ணிழந்த அல்லலும் போன்ற சங்கிலித்தொடரை ஏற்படுத்தி விட்டதே!

(8) சங்கிலித் தொடர்போல் வருகின்ற அந்தப் பாசபந்தங்களையெல்லாம் இறைவியின் அருளால் நீங்கமுடியும் என்பதாலேயே 'பாசஹந்த்ரி' எனப்பட்டாள்.

இராமகிருஷ்ண பரமஹம்சர் போன்ற அன்னையின் அடியவர்கள் பலர் இல்லறத்தில் வாழ்ந்தாலும் ஆசாபாசங்கள் அற்ற நிலையில் 'வானப்பிரஸ்த ஆச்ரமி'களாக வாழ்ந்த வரலாறுகள் உண்டு. காரணம், அன்னை பாசத் தொடரையெல்லாம் தானே வந்து நீக்கும் கருணையுள்ளவள்.

(9) சிறந்த தேவிஉபாஸகரான சங்கீதமூர்த்தி ஸ்ரீ முத்துசுவாமி தீட்சிதர் அவர்கள் கடைசியாக எழுதிய கீர்த்தனை "மீனாட்சி மேமுதம் தேஹி" என்பதாகும். அப்பாடலில் வரும் மீனலோசனி, (பாசத்தினை நீக்கும் கயற்கண்ணி) என்ற அடியினை 'நிரவல்' செய்து கொண்டிருக்கும்போது ஸ்ரீ தீட்சிதர் பூதவுடல் நீங்கி 'ஸ்ரீபுரம்' எய்தினார் என்பது வரலாறு.

(10) நம்மிடையே வாழ்ந்து சமீபத்தில் மறைந்த பிரும்மஸ்ரீ பாபநாசம் சிவன் அவர்களும் தான் கடைசியாக எழுதிய கீர்த்தனையில் " நானிலத்தில் பல பிறவியெடுத்துத் திண்டாடினதுபோதாதா தேவி " எனக் கேட்டு, 'அம்மா' வென அலறுகிறேன் என்றும் " நான் ஒரு விளையாட்டுப் பொம்மையா ? ஜெகன்நாயகியே ! உமையே ! " எனப் பல்லவி அமைத்தும் பாடினர். அவரும் அல்லற் பிறவியும் ஆசாபாசமும் விடுபட்டு அன்னைக்குரிய நவராத்திரியில் பரகதியெய்தினர்.

(11) பந்தபாசக் கட்டுக்களை நீக்க அன்னை தானே வந்து தலையளித்து அருளுகிருள். அவ்வாறு பற்று நீக்கம்செய்யச் சிந்துர வண்ணத்தினளாக வருகிருள். ஏன் ? துறவு நிலையினையும், தியாகத்தையும் குறிக்கும் நிறம் சிவப்பன்றோ ?

(12) ஒரு சிறுபாசம் நம்மிடம் தங்கினுல்கூட அது சங்கிலித் தொடர்போன்ற அல்லல்களுக்கும் பிறவிக்கும் காரணமாகிவிடும் என்ற தனது கருணை எண்ணத்தினுல் அன்னை பாசத்தொடர் அனைத்தையும் வேரோடு களைந்துவிடுகிருள். அதனுல் 'பாசத் தொடரையெல்லாம்' என்று கூறினர்.

(13) பாசத் தொடரின் காரணமாக மாயையில் மயங்கிய மக்களுக்கு அன்னையின் நினைப்பும் அற்றுப்போகும். ஆயினும் அவள் மறந்துபோகாது உரிய நேரத்தில் தானே வலிய வந்து அவற்றினை நீக்குகிருள். அதனுல், " வந்து அரி சிந்துர வண்ணத்தினள் " என்ருர்.

## ஆ மகிடன் தலைமேல் அந்தரி

(1) மகிடாசுர அசுரனின் தலைமீது தீங்கைச் செய்தவள். அதாவது அவனை வதைத்தவள்.

(2) அன்னையின் திருவிளையாடல்களில் மகிடனை வதைத்த வரலாறு முக்கியமான ஒன்ருகும். அதனுல் அவள் 'மகிஷாசுர மர்த்தினி' என்றும், 'மகிஷ சூதனி' என்றும் பெயர் பெற்ருள். அவளை திவாகர நிகண்டு மகிடற்காய்ந்தாள் எனவும், தேவாரம் 'மகிடற்செற்று திகழ் நீலி' எனவும் கூறுவதை திரு. நஜன் எடுத்துக் காட்டுகிருர்.

(3) 'ரம்பன்' என்பவன் சூரியதேவனின் வரத்தின்மூலம் மிக்க பராக்கிரமமுடைய மகிடனைப் பெற்ருன். காட்டெருமையொன்றினைக் காமுற்று அதனிடம் மகவினைப் பெற்ருன் ரம்பன். எருமை முகத்துடன் தோன்றிய மகிடாசுரனும் தவமியற்றி எவராலும் மரணமில்லாத வரத்தினைப் பெற்ருன். பெண்டிர் யாரும் அவனைக்

கொல்லத் தக்க ஆற்றல் பெற்றிரார் என எண்ணிய அவன் அவ்வாறு மரணம் ஏற்படினும் அது பெண்ணால்தான் அமையவேண்டும் என்று வேண்டினன்.

மூவரும், தேவரும் வேண்ட அன்னை இலட்சுமி, சரஸ்வதி, கௌரி ஆகிய மூவரின் 'சமஷ்டியாகப்' பதினெண் கரங்களுடன் துர்க்கை அல்லது கொற்றவை என்ற பெயருடன் தோன்றினள்.

பின்னர் போர்க்களம் புகுந்து மகிடனை வதைத்து அவனது தலைமிசை திருவடி சூட்டினள். அன்றிலிருந்து அவள் மகிடாசுர மர்த்தினியானள்.

(4) எருமை என்பது அறியாமையின் சின்னம். அம்பிகையின் திருவடி தீட்சையினல் அறியாமை நீங்குகிறது என்பதையே இவ் வரலாறு விளக்குகிறது.

சிவபெருமான் முயலகனை அடக்கியதும், முருகன் ஆட்டினை அடக்கியதும் இதே தத்துவத்தினை விளக்கும்.

(5) அந்தரி யென்றால் அனைத்துயிர்களின் உள்ளே 'தகரா காசம்' என்னும் இதயத்தானத்தில் இருப்பவள் என்று முன்னரே கண்டோம்.

மகிடாசுரன் யுத்தகளத்தில் பல மாயங்களைச் செய்து போரிட்டான் போர்க்களத்தில் பல மகிடாசுரர்கள் தோன்றினர். அதனைக் கண்டு அனைவரும் திகைத்து வியந்தனர். ஆனல் அனைத்துயிர்களிடத்தும் அந்தரியாகவிருக்கும் அன்னை உண்மை மகிடனைக் கண்டு வதைத்தாள். அதனல் 'மகிடன் தலைமேல் அந்தரி' என்றார்.

(6) தான் மகிடனை வென்றதை அனைவரும் அறிய - அறியாமையினைத் தனது திருவடி தீட்சைமூலம் அகற்றுகிறாள் என்பதை அறிய அவள் மகிடன் தலைமீது அந்தரியாகவே துர்க்கை உருவில் காட்சி தருகிறாள்.

## இ. நீலி

(1) நீல நிறமுடைய காளியும் ஆனவள்.

(2) மகிடனை வதைத்ததுபோல் காளியின் உருவெடுத்துப் பல அசுரர்களை அழித்தவள் என்பது தோன்ற மகிடாசுர வதையினைக் குறிப்பிட்டு அத்துடன் நீலி என்றார்.

(3) காளி நீலநிறமுடையவள் ஆதலால் 'நீலி' என்றார். சிறிது தண்ணீர் நம் கையில் இருந்தால் அது நிறமற்றுத் தோன்றுகிறது. ஆனல் எங்கும் பரந்து நிறைந்த கடல்நீர் நீலமாகத் தோன்றுகிறது.

அதுபோல் எங்கும் நிறைந்தவள் ஆதலில் காளி நீலமாகத் தோன்று கிருள் என திரு நஜன் அவர்கள் விளக்குகிருர்.

(4) நம்மிடம் ஒருசெய்தியினை மறைப்பவனை 'கள்ளி' என்றும் 'நீலி' என்றும் குறிப்பிடுகிறோம். மாயையினுல் திரோதானம் என்னும் மறைத்தல் தொழிலைச்செய்வதால் அம்பிகையும் 'நீலி' ஆனுள்.

ஈ. அழியாத கன்னிகை

(1) என்றும் கன்னித்தன்மை மாருதவள்.

(2) அகிலாண்ட கோடியீன்ற அன்னையே! பின்னையும் கன்னியென மறைபேசும் ஆனந்தரூப மயிலே! எனத் தாயுமானவர் கூறுவது அனைவரும் அறிந்ததே.

(3) ஈசன் என்றும் பிரம்மச்சாரி. அவ்வாறே அன்னை என்றும் கன்னி. உலக இயக்கத்துக்கு இருவரும் இணைந்து செயல்படுவர். அஃதன்றி ஆசாபாசமிக்க தாம்பத்ய மன்று அவர்களுடையது.

(4) பிரணவத்திலிருந்து கணபதியும் நுதல்விழியினின்று முருகனும் தோன்றினர்.

(5) அனைத்துலகினையும் கன்னித்தாய் தனது கண்களைத் திறப்பதன்மூலமே படைத்து விடுகிருள்.

(6) புதிய முயற்சியை — முதல் முயற்சியை கன்னிமுயற்சி என்கிறோம். அம்பிகை என்றும் முதல்வியாகவும் புதியவளாகவும் இருப்பதால் அவள் 'அழியாத கன்னிகை.'

(7) 'துர்க்கா' என்ற சகஸ்ரநாமத்திற்கே "ஒன்பது வயது கன்னி" என்று உரை கூறப்படுகிறது.

(8) காத்யாயநாய வித்மஹே, கன்யகுமாரி, தீமஹி தந்நோ துர்க்கிப்பிரசோதயாத்" என்று துர்க்கா காயத்திரி குறிப்பிடுகிறது. அதாவது கன்னியாகவும் குமாரியாகவும் உள்ளவள் என்கிறது. அவ்வாறே மகிடனை வதைத்த துர்க்கையினைக் கூறுமிடத்தில் அபிராமிபட்டரும் 'அழியாத கன்னிகை' என்ருர்.

**(9) ஓர் நவீன விளக்கம்;** கிரிக்கெட் விளையாட்டில் 'ஏன்' நஷ்டமில்லாமல் வீசப்படும் ஓவர்(பந்துவீச்சு) **Maiden over** (கன்னி வீச்சு) எனப்படுகிறது. ஐந்தொழிலாகிய அன்னையின் திருவிளையாடல்களில் அவள் எந்தவித நஷ்டமும் தேய்வும் இன்றி என்றும் புதுமையுடன் இருப்பதால் "அழியாத கன்னிகை" ஆகிருள்.

(10) ஓர் பரசமய விளக்கம் - கிருத்துவ மதத்து மாதாவும் Virgin Mary (கன்னி மேரி) எனவே குறிப்பிடப்படுவதும் ஈண்டு ஒப்புநோக்கத்தக்கது.

(11) முக்கடலோரத்தில் தவமியற்றிவரும் குமரியினை மணக்கத் தாணுமாலயன் (சுசீந்திரம் ஈசன்) விரும்பினான். குமரியின் தவம் தடைப்படின் தங்களது இன்னல்கள் தீராது என எண்ணிய தேவர் களின் நோக்கத்தை அறிந்த நாரதன், ஆதவன் உதயத்துக்கு ஒரு நாழிகைக்கு முன் மணமகன் மணவறைக்கு வந்துவிடவேண்டுமென நிபந்தனை விதித்தான். மற்றொரு நிபந்தனைக்கேற்ப, கண்ணில்லாத தேங்காய், கணுவில்லாத கரும்பு, நரம்பில்லாத வெற்றிலை முதலிய சீதனப்பொருள்களுடன் இறைவன் குறித்தநேரத்துக்குமுன் புறப் பட்டுவர, வழியில் நாரதன் கோழியாகிக் கூவியதைக்கேட்டு, திரும்பி விட்டதாகவும் வரலாறு கூறுவர். அவ்வாறு தேவர்களின் வேண்டு கோளுக்காக இன்றும் அவள் தவமியற்றி அசுர சக்திகளை அழிக்க அழியாத கன்னிகையாகவே இருக்கிறாள்.

(12) பகன், முகன் என்னும் இரண்டு அசுரர்களிடமிருந்து தேவர்களைக்காக்கக் காசி விசுவநாதர் அருள்செய்யும் முகத்தான் அம்பிகையின் இருகூறுகளை (அம்சங்களை) அனுப்பினார். இருவரும் அசுரர்களை அழித்துவிட்டுப் பின்னர் முறையே கல்கள்தாவில் (காளி கட்டம்) காளி என்ற பெயருடனும், முக்கடலோரத்தில் குமரி என்னும் பெயருடனும் வாழ்ந்து நாட்டைக் காக்கின்றனர். ஈசனின் இடப்பாகம் உறையும் அம்பிகையே மகிடனை வதைத்தாள். மற்றும் காளியும் குமரியும் ஆகிப் பகனையும் முகனையும் அழித்தாள், ஆகவே மகிடன் தலைமேல் அந்தரியினைக் குறிப்பிட்டுத் தொடர்ந்து 'நீலி' என காளியினையும் அழியாத கன்னிகையென குமரியன்னையினையும் நினைந்தார் அபிராமிபட்டர்.

### உ. ஆரணத்தோன் கம்தரி கைத்தலத்தாள்.

(1) வேதப்பிரமனின் கபாலத்தினைத் தாங்கிய திருக்கரம் உடையவள். ('கம்' என்றால் மண்டையோடு அல்லது கபாலம்).

(2) இறைவனைப்போலவே இறைவியும் பிரம்ம கபாலத்தினைத் தாங்கி நிற்கிறாள்.

(3) பிரமன் அனைவரின் தலையெழுத்தையும் நிர்ணயிக்கிறான். ஆனால் அவனது தலையோடு அன்னையின் கைத்தலத்தில் இருக்கிறது. அதாவது பிரமனுக்கும் முதல்வியென்பதனையும், அவன் தலையெழுத் தையே நிர்ணயித்து அவன் கையெழுத்தையும்மாற்றும் ஆற்றல் உடையவள் என்பதனையும் அறிவிக்கும்வண்ணம் பிரம்மகபாலம் ஏந்தினாள்.

(4) சதாசிவனின் பதிவிரதையாதலின் அவன் எடுக்கும் கோலமெல்லாம் தானுமெடுத்து அவன் சிந்தைப்படி வாழ்பவள் என்பதனையும் உலகினுக்கு உணர்த்த சிவனுர்கைக்கொள்ளும் பிரம்ம கபாலத்தை தானும் கைக்கொண்டாள்.

(5) 'பிரும்ம கல்பம்' என்னும் தனக்குரிய ஆண்டுகள் முடிந்து பிரமனும் மறைந்து வேறு பிரமன் தோன்றுகிருன். அவ்வாறு பல பிரும்மகல்பங்கள் முடிந்தும் தான் என்றும் இறைவனுடன் நித்திய மாய் இருப்பதனைக் காட்ட அன்னையும் அயன்தலையோட்டையேந் தினுள்.

(6) துர்த்தேவதைகளை வழிபட்டு ஆபிசார மந்திரங்கள் புரிவோர் மண்டையோட்டினைப் பயன்படுத்துவர். அபிராமிபட்டர் பிரமனின் கபாலத்தினையே தன் கரத்தில் தாங்கும் அன்னையின் மலர்த்தாள் தனது கருத்தில் இருப்பதைத் தெளிவாக்கி அவர் தீய சக்திகளை வணங்குபவர் அல்ல என்பதையும் உணர்த்துகிருர்.

ஊ. சுந்தரி, எந்தை துணைவி மலர்த்தாள்
என் கருத்தனவே.

(1) மேற்கூறிய சிறப்புக்களுள்ள அழகி என் தந்தையாகிய அமுதீசரின் துணைவியாகிய அபிராமியின் மலர்ப்பாதங்கள் என் சிந்தையதாகும்.

(2) 'சுந்தரி அந்தரி' என்றவிடத்தும், சிந்துரானன சுந்தரி என்றவிடத்தும், இங்கும், ஆக மூன்று இடங்களில் 'சுந்தரி' என்ருர். முப்புரங்களுக்கும் அழகியாகிய திரிபுரசுந்தரி ஆதலின் மும்முறை கூறினுர்போலும்!

(3) அந்தரிபாதம் என்சென்னியதே என்றவிடத்தும், 'மகிடன் தலைமேல் அந்தரி' என்றவிடத்தும் ஆக இரு இடங்களில் 'அந்தரி' என்றசொல்லைப் பயன்படுத்தியிருக்கிருர். 'பராகாசம்' என்ற அந்தரத் திலும், 'தகராகாசம்' என்னும் இதயத்தானமாகிய அந்தரத்திலும் விளங்குவதால் இரண்டு முறை 'அந்தரி' என்ருர்.

(4) சிந்துர வண்ணப் பெண்ணே, சிந்துரானன சுந்தரி, சிந்துரவண்ணத்தினுள் என மூன்று இடங்களில் சிந்துரவண்ணம் குறிக்கப்படுகிறது. 'அருணு', 'ரக்தவர்ணு', 'சிந்தூர திலகாஞ் சிதா' ஆகிய மூன்று நாமாக்களில் லலிதா சகஸ்ரநாமம் கூறுவது போலவே அபிராமிபட்டரும் மூவிடத்தில் குறிப்பிட்டார் எனலாம்.

ஆகவே, சுந்தரி, அந்தரி, சிந்துரவண்ணம் ஆகிய மூன்றும் கூறியதுகூறல் என்ற குற்றமாகாது என்பதை எடுத்துக்காட்டவே இவ்விளக்கம் தரப்படுகிறது.

(5) பாசத்தொடரையெல்லாம் வந்தரியும் அன்னை அதனைச் செய்யவேண்டுமானால் நாமும் ஒன்றைச் செய்யவேண்டும். சாதாரண பற்றுக்களை நீக்கிப் பற்றற்றான் பற்றினைப் பற்றவேண்டும். மற்றவர்களிடம் பந்தபாசம் நீங்கி, இறைவனும் அவனது துணைவியுமே தாய் தந்தையர் எனக்கருதி அவர்கள்பால் பாசம் வைத்தல்வேண்டும். அப்போது பாசத்தொடர்கள் தானே விடுபடும். ஆகவே 'எந்தை துணைவி' என அன்னையினைப் பாசத்தோடும், உரிமையோடும் அழைக்கிறார்.

(6) தனது அவதாரத்தில் தந்தையாய்ப்பெற்ற சிவபாதவிருதயரிடம் திருஞானசம்பந்தர் அம்மையப்பனின் நலம் வினவிய ஞான நெறி ஈண்டு ஒப்புநோக்கத்தக்கது.

"சிற்றிடைப் பேரல்குல் திருந்திழை யவளொடும்
பெற்றெனை ஆளுடைப் பெருந்தகை யிருந்ததே"

என்பது ஆளுடையபிள்ளையின் ஞானவாக்கு.

(7) அங்ஙனம் சாதாரண பந்த பாசங்களை அழித்து, பிரம்ம கபாலத்தை ஏந்தியவளின் மலர்ப்பாதங்களையே தன் கருத்தில் கொண்டிருந்தார் அபிராமிபட்டர். அனைவரின் தலையெழுத்தை எழுதும் பிரமனின் கபாலத்தை ஏந்தியகையள் அமாவாசையினையும் பௌர்ணமி ஆக்குவதில் எந்தச்சிரமமும் எய்தாள் என்பதும் தெளிவு.

(எ) துர்க்கைக்குரியதிதி எட்டாம் நாளாகிய அஷ்டமியாகும். துர்க்காஷ்டமி என்று கொண்டாடப்படுவதை அறிவோம். அஷ்டமியில் கொண்டாடப்படும் அவளை எட்டாவது பாட்டில் குறிப்பிட்டது சிறப்பாகும்.

(ஏ) 'துர்க்கா', 'துக்கஹந்த்ரி' என லலிதா சகஸ்ரநாமம் அவளைத் துதிக்கிறது. துக்கத்தைப்போக்குபவள் துர்க்கையானாள்.

மற்றும் 'துர்க்கம்' என்றால் அகழி என்று பொருள். பல பகைகளினின்றும் நம்மைக் காப்பாற்ற அவள் அகழியைப்போல் அரணாக இருப்பதால் அவள் துர்க்கை எனப்பட்டாள். அவளது பிரதான மூர்த்தம் மூலதுர்க்கையெனவும் வேவ்வேறு அம்சங்கள் நவதுர்க்கைகள் எனவும் போற்றப்படும். என்பதை காக்கும் அந்த ஒன்பது துர்க்கைகளைப்பற்றிச் சுருக்கமான குறிப்பு தரப்படுகிறது.

(1) வனதுர்க்கை :– வனதுர்க்கையென்றால் வனத்தில் இருப்பவள் என்பது பொருளல்ல. சம்சாரமாகிய வனத்தை - காட்டை

அழிப்பவள் என்பது பொருளாகும். 'பவாரண்ய குடாரிகா' (பவவினைகளாகிய காட்டை அழிக்கும் கோடரி) என லலிதா சகஸ்ர நாமம் கூறும்.

(2) சூலினிதுர்க்கை :- திரிபுரம் எரிக்கச் சென்ற இறைவனுடன் சூலபாணியாய்ச் சென்றவள் சூலினிதுர்க்கையாவாள்.

(3) ஜாதவேதோதுர்க்கை :- குமாரசம்பவம் என்னும் முருகன் திருவவதாரத்தின் போது சிவனார் கண்ணினின்று தோன்றிய அக்கினிப்பொறிகளை வாயுவும் அக்கினியும் தாங்கிச்சென்று சரவணத்தில் உய்க்க அவர்களுக்குச் சக்தியினை அளித்தவள் ஜாதவேதோ துர்க்கை.

(4) சாந்திதுர்க்கை :- தட்சயாகத்தின்போது இறைவன் கொண்ட சினத்தைச் சாந்திசெய்தவளும், நோய்முதலிய பீடைகளை யொழிப்பவளும் சாந்திதுர்க்கையாவாள்.

(5) சபரிதுர்க்கை :- அருச்சுனனுக்குப் பாசுபதம் அளிக்க இறைவன் வேடனாய்ச்சென்றபொழுது இறைவியும் சபரி — வேட்டுவச்சிக்கோலத்தில் சென்றதால் சபரிதுர்க்கை எனப்பட்டாள்.

(6) ஜ்வாலாதுர்க்கை :- பண்டாசுரயுத்தத்தில் தனது படைகளைக்காக்க, தானே ஜ்வாலையின் (தீப்பிழம்பின்)வடிவாக இருந்ததால் ஜ்வாலாதுர்க்கை எனப்பட்டாள்.

(7) லவணதுர்க்கை :- இராமாயணகாலத்தில் இருந்த லவணாசுரனை அழிக்கச்சத்ருக்னனுக்கு உதவியவள் லவணதுர்க்கையாவாள்.

(8) ஆசுரிதுர்க்கை :- அமுதம் கடைந்தெடுத்தவுடன் அசுரர்களையும் மயங்கச்செய்து தேவர்கள் அமுதுண்ணச்செய்யும் ஆற்றலைத் திருமாலுக்கு அளித்தவள் ஆசுரிதுர்க்கையாவாள்.

(9) தீபதுர்க்கை :- குண்டலினியோகிகளுக்கு ஞானஒளியினைக் கொடுப்பவள் தீபதுர்க்கையாவாள்.

மற்றும் அவள் அனைவருக்கும் வெற்றியினைத்தருவதால் ஜெய துர்க்கையெனவும், பதினெட்டுக்கரங்கள் படைத்ததால் அஷ்டாதச புஜதுர்க்கையெனவும், இராகுகாலத்தில் வணங்கப்படுவதால் இராகு காலத் துர்க்கையெனவும், சண்டமுண்டர்களை அழித்ததால் சாமுண்டி எனவும், சிவந்தநிறமுடைமையால் 'கெம்பம்மா' எனவும், கொற்றவை எனவும் பலவாறு அழைக்கப்படுகிறாள்.

இப்பாடலின் பாராயண பலன் எடுத்தகாரியம் வெற்றியடைதலாகும்.

# தஞ்சையில்தான்

# நெல் குத்தகை பாக்கி அதிகம்

" தஞ்சை மாவட்டத்தில்தான் ஆண்டவனுக்கு வரவேண்டிய குத்தகை நெல் பணத்தை வழங்காமல் அதிக எண்ணிக்கையில் குத்தகைதாரர்கள் இருக்கிறுர்கள் என்று பட்டுக்கோட்டையில் நடைபெற்ற கம்பன் விழாவில் பங்குகொண்டு உரையாற்றிய தமிழ்நாடு அறநிலயத்துறை அமைச்சர் இராம. வீரப்பன் கூறினர்.

மாநிலத்து அளவில் ஆலயக்குத்தகை பாக்கி ரூ 28 கோடியில் தஞ்சைமாவட்டத்திலிருந்துமட்டும் வரவேண்டியது ரூ. 20 கோடியாகும். நான் வந்தவழி பகுத்தறிவுவழி என்ருலும் ஆண்டவனும் மக்களுக்குப் பாடம்கொடுக்கிருர் என்பதை மன்னுர்குடியில் தெரிந்துகொண்டேன். 'அரசு அன்று கொல்லும் தெய்வம் நின்று கொல்லும்' என்று சனுதன தர்மத்தினர் கூறுவர். மன்னுர்குடி ஆலயத்தில் ஈவு இரக்கமின்றி அர்ச்சகரைக் கொன்றபிறகும் அந்தக் கொலையாளியால் ஆண்டவன் நகைகளை எடுத்துச் செல்ல முடியவில்லை. ஒரு குன்றுமணி அளவுகூடக் குறையாமல் நகைகள் அங்கேயே கிடந்திருக்கின்றன. ஓடியவனும் அகப்பட்டுக் கொண்டு தூக்குத் தண்டனை பெற்றுவிட்டான். ஆலயக் குத்தகையை அளக்காது ஏமாற்றுபவர்கள் இதை மனத்தில் கொள்ளவேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன் என்று கூறினர். "

நன்றி — தினமணி, 25—10—80

---

கடிதம்

O. P. G. DANDAPANY CHETTIAR. NAGORE
27, Sivan East Street 21—10—1980

... இப்பவும் நான் சிலமாதங்களாக வைத்தீஸ்வரன்கோயிலில் உள்ள ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி கிருத்திகை அபிஷேக வைபவத்திற்கு அடியேன் வந்துகொண்டு இருக்கின்றேன். அந்த நடைபெறும் அபிஷேகங்களைப் பார்த்து ரொம்ப சந்தோஷப்படுவேன். இதுமாதிரி எங்கும் நிம்மதியாக நடைபெற்றுப் பார்த்ததில்லை. ...

# செய்திகள்

## ஸ்ரீ மகாலட்சுமி துர்க்காதேவிக்கு

## 30 ஆவது ஆண்டு சதசண்டி வேள்வி விழா

தருமையாதீனம் ஸ்ரீ அஷ்டா தசபுஜ மகாலட்சுமி துர்க்கா தேவிக்கு இவ்வாண்டும் நவராத்திரி விழாவை முன்னிட்டு உலக நலம் கருதிச் சதசண்டி வேள்வி ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருவுளப்பாங்கின் வண்ணம் சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீ துர்க்கா தேவி சந்நிதியில் மின் விளக்குகளாலும், மலர்களாலும் அலங்கரிக்கப் பெற்றிருந்த வேள்வி மண்டபத்தில் யாக கலசங்கள் வைத்து அலங்கார ஆராதனைகள் நாடோறும் செய்யப்பெற்றன. சதசண்டி வேள்விசிறப்பாக நிகழ்வுற்றது. நாள்தோறும் சுவாசினீ - குமாரி - வடு பூஜைகள், சதுர்வேத பாராயணம், துர்க்கா சூக்த பாராயணம், தேவீ மகாத்மிய பாராயணம், அபிராமி அந்தாதி பாராயணம், ஸ்ரீ துர்க்கா தேவிக்கு லட்சார்ச்சனை, ஸ்ரீ வித்யா சக்கரமாகிய மேருவிற்குச் சகஸ்ரநாம அர்ச்சனை, விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள் நடைபெற்றன.

18—10—80 சனிக்கிழமை நண்பகலில் சப்தசதி ஹோமமும், மகா பூர்ணாகுதியும் நிகழ வேள்வி இனிதே நிறைவுற்றது. 19—10—80 ஞாயிற்றுக் கிழமை விஜயதசமியன்று நண்பகல் ஸ்ரீ துர்க்காதேவிக்குக் கலசாபிஷேகமும் அலங்கார ஆராதனைகளும் நிகழ்வுற்றன. நாள்தோறும் இரவு வழிபாட்டின்போது ஆனந்த தாண்டவபுரம், பிர்மஸ்ரீ. பி. இராமதாசஐயர் அவர்கள் தொடர்ந்து தேவிபாகவத விரிவுரை நிகழ்த்தினார்கள். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் இருவேளைகளிலும் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்களுக்கு அருட் பிரசாதம் வழங்கினார்கள்.

## ஆதீனக் கல்வி நிலையங்களின் கலைமகள் விழா

ஆதீனக் கல்விநிலையங்களாகிய வேத சிவாகம பாடசாலை, தேவார பாடசாலை, ஸ்ரீ குருஞானசம்பந்தர் தொடக்கப்பள்ளி, ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்நிலைப்பள்ளி, ஆதீனப் பல்கலைக்கல்லூரி ஆகியவற்றின் சார்பாக 10—10—80 முதல் 19—10—80 முடியக்

கலைமகள் விழா கொண்டாடப்பெற்றது. நாள்தோறும் மாலை மணி 3-30 முதல் தருமையாதீனத் திருநெறிய தெய்வத்தமிழ் மன்றத்தில் விழா நிகழ்வுற்றது. நாளும் முறையே அன்பு, அறம், வீரம், பண்பாடு, நீதி, கொடை, சால்பு, வாய்மை, கற்பு, புலமைத் திருநாள்களாகக் கொண்டாடப் பெற்றது. பேரறிஞர்களது சிறப்புரையுடன் ஆதீனக் கல்விநிலைய ஆசிரியர்களும் மாணவர்களும் தலைப்புக்களையொட்டி உரைநிகழ்த்தினர். கல்விநிலைய மாணவர்களால் கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பெற்றன.

## ஆதீனத் திருக்கோயில்களில் நவராத்திரி விழா

நவராத்திரித் திருநாளை முன்னிட்டுத் திருக்கடவூர், வேளூர், சீர்காழி, திருவையாறு, திருப்பனந்தாள், திருபுவனம், குத்தாலம், பேரளம் முதலிய தலங்களில் உள்ள ஆதீனக் கோயில்களில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் அருளாணைவண்ணம் சிறப்பாக நடைபெற்றது. உலகநலங் கருதி அம்பாளுக்கு அர்ச்சனையும், விசேஷ அபிஷேக ஆராதனைகளும் நடைபெற்றன. அன்னையின் அருள் விளக்கும் சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. அன்பர் பலர் கலந்து கொண்டு வழிபட்டுப் பயனுற்றனர்.

## ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு

தருமையாதீனம் இருபத்தாறுவது ஸ்ரீலஸ்ரீகுருமகாசந்நிதானத்தின் ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு ஐப்பசித் திங்கள் 12 ஆம் நாள் 31—10—80 வெள்ளியன்று காலை 9 மணி அளவில் திருக்கலயநல்லூர் அருள்மிகு அமிர்தவல்லி உடனுறைய அருள்மிகு அமிர்தகலசநாதர் திருக்கோயிலிலும், திருக்கருக்குடி அருள் மிகு கல்யாணி உடனுறைய அருள்மிகு கருக்குடிநாதர் திருக்கோயிலிலும் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பாக நடைபெற்றது. வழிபாட்டின்போது ஆங்காங்கும் தலத் திருப்பதிகம் பாராயணம் செய்யப் பெற்றது. தருமையாதீன அடியவர் ஸ்ரீ நெல்லையப்பசுவாமி 'பிறவிப்பயன்' என்பது பற்றியும் வித்துவான் திரு மு. சிவச்சந்திரன்' எம். ஏ. ஏனாதிநாதர் பற்றியும் சொற்பொழிவாற்றினர். அச்சிடப் பெற்ற தலத் திருப்பதிகங்கள் வந்திருந்த அன்பர்கட்கு வழங்கப் பட்டன. அன்பர் பலர் தரிசித்துப் பயன் பெற்றனர்.

## ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி
## ஒன்பதாம் ஆண்டுக் குருபூஜை விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்தில் 25 ஆவது குருமகா சந்நிதானமாக எழுந்தருளியிருந்த ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி

யவர்களின் ஒன்பதாம் ஆண்டுக் குருபூஜை விழா 31—10—80 வெள்ளிக் கிழமையன்று குருமூர்த்த ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது. காலை, மாலை இருவேளைகளிலும் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் எழுந்தருளிக் குருமூர்த்த ஆலயத்தில் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தி அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கி யருளினார்கள்.

காலை வழிபாட்டிற்குப் பின்னர், ஒன்பதாம் ஆண்டுக் குருபூஜை நினைவாக ஒன்பதாம் திருமுறைபற்றி ஆய்வரங்கம் நிகழ்வுற்றது. ஒன்பதாம் திருமுறை ஆசிரியர்கள் ஒன்பதின்மரைப்பற்றித் தருமை ஆதீனக் கல்விநிலைய ஆசிரியர்கள் விரிவுரையாற்றினர். நண்பகல் மாகேசுவரபூசை சிறப்பாக நிகழ்வுற்றது மாலையில் தருமையாதீனத் திருக்கோயில்களின் திருமுறைப் பணியாளர்கள் திருமுறை இசையரங்கு நிகழ்த்தினர்.

இரவு வழிபாட்டின்போது "இடர்களையும் திருமுறைத்திரட்டு" விழாமலராக வெளியிடப் பெற்றது. விழாவில் பேராசிரியர் டாக்டர் திரு. ந. சஞ்சீவி அவர்கள் சிறப்புரையாற்றினார். ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் விழா மலரை அன்பர்கட்கு வழங்கி ஆசியுரை அருளினார்கள். பெருமக்கள் பலரும் விழாவில் கலந்துகொண்டு குருவருள் பெற்றனர்.

**ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அறக்கட்டளையின் சார்பில் காசியில்:** ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி முத்திப் பேறெய்திய ஸ்ரீ காசி குமாரசாமி மடத்தில் குருமணியின் திருவுருவப் படத்திற்குச் சிறப்பு வழிபாடும், ஸ்ரீ விசாலாட்சியம்மை உடனாகிய ஸ்ரீ விசுவநாதர், ஸ்ரீ அன்னபூரணி, ஸ்ரீ கேதாரநாதர் ஆகிய மூர்த்திகளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும், நண்பகல் மாகேசுவர பூஜையும் சாதுக்களுக்குப் பண்டாராவும் சிறப்புற நடைபெற்றன. அன்பர்கள் வழிபாடுசெய்து பயனுற்றனர்.

**மாயூரத்தில் :** ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி குருபூஜையன்று மாலை 7 மணியளவில் மாயூரம் தெய்வத்தமிழ் மன்றத்தினரால் ஏ. வி. சி. பழைய திருமணமண்டபத்தில் நினைவுவிழா கொண்டாடப்பெற்றது. பேராசிரியர் டாக்டர் திரு. ந. சஞ்சீவி அவர்கள் சிறப்புரையாற்றினார். மாயூரம் அன்பர்பலர் வந்திருந்து கேட்டுப் பயன் பெற்றனர்.

## ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்
## ஞான பீடத்தமர்ந்த திருநாள்

தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஞானபீடத்தமர்ந்த

திருநாள், 3—11—80 திங்களன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. அன்று காலை ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமிக்கு உருத்திராபிஷேகமும், விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகளும் நடைபெற்றன; பன்னிரு திருமுறைகள் பூசிக்கப்பெற்றுப் பாராயணம் செய்யப்பெற்றது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்திற்குத் திக்பால விஜய ஸ்நான சாந்தி ஹோமம் நிகழ்வுற்றது. ஸ்ரீ அஷ்டாதசபுஜ துர்க்காம்பிகை திருக்கோயிலில் அம்பிகைக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும் அம்பாள் சந்நிதியில் ஸ்ரீ சூக்தம் அகண்ட பாராயணமும் நிகழ்ந்தன. விழாவில் கலந்துகொண்ட அன்பர்கட்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அருட்பிரசாதம் வழங்கியருளினார்கள். மெய்யன்பர்கள் பலரும் விழாவிற் கலந்துகொண்டு குருதரிசனம் செய்து பயன் பெற்றனர்.

## தருமையாதீனத்திலும் திருப்பெண்ணாகடத்திலும்

# ஸ்ரீ மெய்கண்ட தேவர் குருபூஜை விழா

சந்தானாசாரியருள் முதல்வராகிய ஸ்ரீ மெய்கண்டதேவநாயனார் குருபூஜைத் திருநாள்வழிபாடு ஐப்பசித்திங்கள் 22 ஆம் நாள் 7—11—80 வெள்ளிக்கிழமை காலை தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் நடைபெற்றது. மாலை 7 மணியளவில் வித்துவான் திரு. மு. ஆறுமுக தேசிகர் 'பொது அதிகாரம்' என்ற தலைப்பிலும், வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன், பி. லிட். 'உண்மையதிகாரம்' என்ற தலைப்பிலும் சிவஞானபோதச் சொற்பொழிவு நிகழ்த்தினர். ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் காலை, மாலை இருவேளைகளிலும் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்கட்கு அருட்பிரசாதம் வழங்கியருளினார்கள்.

அன்று காலை திருத்தூங்கானைமாடம் அருள்மிகு கடந்தைநாயகி உடனாகிய அருள்மிகு சுடர்க்கொழுந்தீசர் திருக்கோயிலில் சுவாமி அம்பாளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும், பெண்ணாகடம் ஸ்ரீ மெய்கண்டதேவநாயனார் ஆலயத்திலுள்ள குருமூர்த்தத்திற்கும் திருவெண்ணெய்நல்லூர் ஸ்ரீ மெய்கண்டதேவநாயனார் ஆலயத்தில் உள்ள குருமூர்த்தத்திற்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. பெண்ணாகடம் குருமூர்த்த ஆலயத்தில் விரிவுரைகள் நடைபெற்றன. அன்பர்பலர் வழிபட்டும் சொற்பொழிவுகளைக் கேட்டும் பயனுற்றனர்.

உ

# எதிர்காலம்

★


## ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.


### ரௌத்திரி ௵ கார்த்திகை ௴ 1௳ முதல் 30௳ முடிய.

### ( 16—11—80 முதல் 15—12—80 முடிய )

ஸ்ரீ ரௌத்திரிவருடம் கார்த்திகைமாதம் 1௳ பானுவாரம் சதய நக்ஷத்திரம் பாலவகரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம்முதல் 43 விநாடிக்கு விருச்சிக லக்னத்தில் ஸ்ரீ லோகரட்சகரான சூரிய பகவான் லோக சுபிட்சார்த்தத்தை முன்னிட்டு, துலாராசியிலிருந்து விருச்சிகராசி சங்கிரமணமாக கார்த்திகைமாதப்பிரவேசம் செய்தருளுகின்றார். அன்று விஷ்ணுபதி புண்ணியகாலமாகும். சங்கிரமகால கிரகஸ்திதியின் பலனாவது உலகத்தில் கிழக்கு நாடுகளில் மத்தியஸ்தத்தினால் போர் நிறுத்தம் ஆகும். ஆயினும் இரண்டாம் இடம் செவ்வாய் இருப்பதால் சவால் பேச்சுக்கள் தொடர்ந்துகொண்டிருக்கும். மற்றக் கிரகநிலைமையால் வியாபார ஏற்றுமதிகளில் சிக்கல்களும் ஸ்தம்பன நிலைமையும் நீங்குவதாகும். வியாபாரக் கப்பல்களுக்குச் சேதமிராது. எல்லாப் பொருள்களின் விலைவாசியும் ஏற்ற இறக்கம் இன்றிச் சமனாக இருந்துவரும். உலகில் எங்கும் ஆன்றோர்களின் தர்மநெறியில் ஈஸ்வர ரட்சகமாக பிரஜாசம்ரக்ஷண காரியங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கும். தேசங்களில் மன்னர்கள், ஜனாதிபதிகள், மந்திரிகள் பிரஜைகளின் பொருளாதாரமுன்னேற்றத்திற்கான தொழில் துறை வளர்ச்சிக்குச் செயல்திட்டம் பல வகுப்பார்கள். மக்கள் தம் ஜீவனோபாயத் தொழில்களில் மேன்மையுற்று விளங்குவர்.

உலகிலுள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் பூர்வபுண்ணியத்தின் பலனில் ஈஸ்வரன் அருளிய பிரசாதமாகச் சிவராஜயோகத்திற்கான கிரக நிலையின்போது அவதரித்துவந்து திருவீற்றிருக்கின்ற சிவஞான குருமகான்கள் உலகத்திற்குச் சிவதர்மங்களின் விசேஷத்தினை எடுத்தியம்புவார்கள். அன்னார் வழியில் உலகில் சிவதர்ம கைங்கர்யங்கள் நடந்துகொண்டிருக்கும். நம்தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் நித்தியம் ஆறுகால பூஜைகள் சிறப்பாக நடை

பெறும். உலகமாந்தர்கள் தெய்வபக்தி மிகுந்தவர்களாகி நல்வினை புரிந்து க்ஷேமகரமாக வாழ்வார்கள்.

குறிப்பு :— தமிழ்மாத எதிர்காலப் பலனில் இராசிகளுக்கு மாதப்பலனுகக்கூறப்படுகிறது. எனினும் தினசரி முக்கியமாக வருகிற பிரச்சினைகளுக்கு நன்மை தீமையறிந்து செயல்படுவதற்கு ஏதுவாக நற்பலனைத்தருகின்ற தேதிகளைக் குறிப்பிடுவோம். ஆங்கிலத்தேதியே எல்லோருக்கும் எளிதில்வரும் ஆதலால் இராசிபலனைக்கூறுமிடத்தில் ஆங்கிலமாதம் தேதிகள் குறிக்கப்பட்டுள்ளன.

1. **மேஷம் :- அசுவதி - பரணி – கார்த்திகை ¼**

( சு. சே. சோ. லா. - லி. லு. லே. லோ. - அ. )

மேஷராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். பண வருமானம் கணக்கின்படி கணிசமாக வரும். சகோதரருக்கு நவம்பர் 29உ முதல் அரசாங்க நன்மையை ஏற்படுத்தும். வித்தியா வியாபாராதி கலைத்துறைகளில் சிறப்புமிகும். ஓர் ஒப்பந்தப் பணியைத் துவங்கும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். நவம்பர் 16, 17, 20, 21, 24, 25 டிசம்பர் 1, 2, 3, 4, 5, 11, 12, 13, 14 தேதிகளில் தனுதாயம், மனோற்சாகம், காரியசித்தி ஆகிய நற்பலன் தரும் டிசம்பர் 6, 7 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

2. **ரிஷபம் :- கார்த்திகை ¾ - உரோகிணி – மிருகசீர்ஷம் ½**

( இ. ஊ. ஏ. - ஓ. வ. வி. வு - வே. வோ. )

ரிஷபராசி 9 பாதங்களும் மிச்சிர பலனுக நடக்கும். பண வருமானங்களில் நல்ல ஸ்திதியை ஏற்படுத்தும். இராசிக்கு ஓர் விபத்துவந்து தப்பும். ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கு அருச்சனை செய்ய நலம் தரும். வித்தியாவியாபாராதி கலைத்துறைகளில் நல்லன ஏற்படும். புத்திரனுக்கு நல்லன ஏற்பட்டுக்கொண்டிருக்கும். மனைவியின் தேக நலம் பாதித்து உடன் குணமாகும். நவம்பர் 16, 17, 18, 19, 22, 23, 27, 28 டிசம்பர் 4, 5, 6, 7, 13, 14, 15 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களை ஏற்படுத்தும். டிசம்பர் 8, 9, 10 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

3. **மிதுனம் :- மிருகசீர்ஷம் ½ - திருவாதிரை – புனர்பூசம் ¾**

( கா. கி. - கு. க. ங. ச்சா. - கே. கோ. ஹ. )

மிதுனராசி 9 பாதங்களும் சுபபலனைத்தரும். பணவருமானங்கள் கணிசமாகவரும். சகோதரருக்கு உயர்வுதரும். நூதன வஸ்துவின்

பிராப்தியையளிக்கும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் நல்லன ஏற்படும். புத்திரர் பௌத்திரர்களினால் சந்துஷ்டி ஏற்படும். தாம்பத்திய வாழ்வில் பிணக்குவந்து சரிபடும் நவம்பர் 18, 19, 20, 21, 24, 25, 29, 30 டிசம்பர் 6, 7, 8, 9, 10, 14, 15 தேதிகளில் நற்பலனும் சந்தோஷமும் ஏற்படும். டிசம்பர் 11, 12 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

**4. கடகம் :- புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.**

( ஹி. - ஹு. ஹே. ஹோ. ட. - டி. டு. டே. டோ. )

கடகராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானங்கள் மதிப்பாக வந்துசேரும். சகோதரர் நலம் நன்றாக இருந்து வரும். வீடுவாகன பிராப்திகளில் சௌகரியம் மேலிடும். ஞாயிற்றுக் கிழமை சூரியார்ச்சனைசெய்ய வயிற்று உபாதை நீங்கும். தாம்பத்ய வாழ்க்கை தெய்வபக்தியாக நடந்துவரும். நவம்பர் 20, 21, 22, 23, 26, 27, 28, டிசம்பர் 1, 2, 9, 10, 11, 12 தேதிகளில் தனதாயாதி நற்பலன்களை ஏற்படுத்தும், டிசம்பர் 1, 3, 4 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

**5. சிம்மம் :- மகம் - பூரம் - உத்திரம் ¼**

( ம. மி. மு. மே. - மோ. ட. டி. டு. - டே. )

சிம்மராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பண வரவுகளில் நல்ல நிலைமையை ஏற்படுத்தும். புதிய ஆபரண பிராப்தியையளிக்கும். வீடுவாகனங்களில் புதிய ஏற்பாடுகளைச் செய்யும். புத்திரனின் தேகநலம் பாதித்துக் குணமாகும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். நவம்பர் 16, 17, 22 23, 24, 25, 29, 30 டிசம்பர் 3, 4, 5, 11, 12, 13, 14 தேதிகளில் தனதாயம் காரிய சித்தி ஆகிய நற்பலன் தரும். நவம்பர், 18, 19 தேதிகளில் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

**6. கன்னி :- உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½**

( டோ. ப. பி. - பு. ஷ. ண. ட. - பே. போ. )

கன்னியா ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். குடும்பத்தில் நல்ல பண வருமானங்களை ஏற்படுத்திவரும். வஸ்திர பூஷணங்களின் நிறைவை உண்டுபண்ணும். சகோதரர் மனஸ்தாபம் வரினும் அவர்கள் நல்ல நிலைமையில் இருந்துவருவர். இருப்பிட மாறுதலுக்கான பிரச்சினை எழும். தார புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். நவம்பர் 16, 17, 18, 19, 24, 25, 26, 27, 28, டிஸம்பர் 1, 2, 6, 7, 13, 14, 15 தேதிகளில் தனதாயம் காரிய ஜெயம் ஆகிய நற்பலன் தரும். நவம்பர் 20, 21 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

**7. துலாம் :– சித்திரை $\frac{1}{2}$ – சுவாதி – விசாகம் $\frac{3}{4}$**

( ர. ரி. - ரு. ரே. ரோ. தா. - தி. து. தே. )

துலா ராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். பண வருமானம் செந் நெல் பிராப்தியில் நல்ல நிலைமையை உருவாக்கும். மிக முக்கிய செலவுகளும் இருந்துவரும். சகோதரருக்கு நல்லன ஏற்படும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் பிரபலஸ்திதியாகும். தார புத்திரர் களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். நவம்பர் 18, 19, 20, 21, 27, 28, 29, 30; டிஸம்பர் 4, 5, 9, 10, 15 தேதிகளில் தனதாயாதி நற்பலன்களையளிக்கும். நவம்பர் 22, 23 தேதிகள் சந்த்ராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

**8. விருச்சிகம் :– விசாகம் $\frac{1}{4}$ - அனுஷம் – கேட்டை.**

( தோ. - ந. நி. நு. நே. - நோ. ய. யி. யு. )

விருச்சிக ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பத்தில் பண வரவுகள் மூன்று விதங்களில் வரும். துரித மொழி பேசுவதினின்றும் உள் அந்தரங்கம் வெளிப்பட்டு, சில சங்கடம் வந்து நீங்கும். ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கு அருச்சனை செய்ய நன்மைதரும். வித்தியா வியாபாராதிகளில் கலைத்துறைகளில் கௌரவ ஸ்திதியை ஏற்படுத்தும். மனைவிவழி டாம்பீகச் செலவு மிகும். நவம்பர் 20, 21, 22, 23, 29, 30; டிஸம்பர் 1, 2, 3, 6, 7, 11, 12 தேதிகளில் தன தாய நன்மைகளை ஏற்படுத்தும். நவம்பர் 24, 25 தேதிகள் சந்திராஷ் டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

**9. தனுசு :– மூலம் – பூராடம் – உத்திராடம் $\frac{1}{4}$**

( யே. யோ. பா. பி. - பு. த. ப. ட. - பே. )

தனுர்ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். பண வரவு செலவுகள் சரிசமனுக இருந்துவரும். இயந்திர வாகனம் பழுதாகிச் சீர்படும். வித்தியாவியாபாராதி கலைத்துறைகளில் நன்மைகள் உண்டா கும். புத்திரர் சம்பந்தமாக ஓர் செலவு ஏற்படும். ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கு அருச்சனைசெய்ய மனோவேகம் தணியும். மனைவியின் உடல் நலம் பாதிக்கினும் உடன் குணமாகும், நவம்பர் 16, 17, 22, 23, 24, 25; டிசம்பர் 1, 2, 3, 4, 9, 10, 13, 14 தேதிகளில் தனதாயாதி நற்பலன்களைத்தரும். நவம்பர் 26, 27, 28 தேதிகள் சந்திராஷ்டமம், மற்றதேதிகளில் மத்திமபலன் தரும்.

**10. மகரம் :– உத்திராடம் $\frac{3}{4}$ – திருவோணம் – அவிட்டம் $\frac{1}{2}$**

( போ. ஜ. ஜி. - கி. கு. கே. கோ. - கா. கி. )

மகரராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்பாபி விருத்தியில் தனதிசௌகரியங்களில் நல்லநிலைமையை ஏற்படுத்தும்.

சகோதரர் சம்பந்தமாக செலவினங்கள் இருந்துவரும். வித்தியா வியாபாராதிகலைத்துறைகளில் நற்பலன் வரும். மனைவி மைந்தர்களால் சௌகரியம் மேலிடும். சந்துஷ்டி நிலவுதல் ஆகும். நவம்பர் 18, 19, 24, 25, 26, 27, 28; டிசம்பர் 4, 5, 6, 7, 11, 12, 15 தேதிகளில் தனுதாயம் நன்மதிப்புத்தரும். நவம்பர் 29, 30 தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திம பலன் தரும்.

## 11. கும்பம் :- அவிட்டம் ½ – சதயம் - பூரட்டாதி ¾

(கு, கே. - கோ. ஸ. ஸி. ஸு. - ஸே. ஸோ. தா.)

கும்பராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். சமயோசித லேவாதேவிகள் மூலம் பணவருமானங்கள் வந்துகொண்டிருக்கும். சகோதரருக்கு உயர்வும் அவர்களால் நன்மையும் ஏற்படும். வீடு வாகனங்களின் சௌகரியம் மேலாக இருந்துவரும். மாதப்பின்பகுதியில் புத்திரனுக்கு அரசாங்க நன்மையைத் தரும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். நவம்பர், 16, 20, 21, 27, 28, 29, 30; டிசம்பர் 6, 7, 8, 9, 10, 13 14 தேதிகளில் மிகுந்த நற்பலன் தரும். டிசம்பர் 1, 2 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

## 12. மீனம் :- பூரட்டாதி ¼– உத்திரட்டாதி – ரேவதி.

(தி. - து. ஸ. ச. த. - தே. தோ. ச. சி.)

மீனராசி 9 பாதங்களும் மிச்சிரபலனை நடக்கும். குடும்பாபிவிருத்தியில் பணவருமானம் வந்துகொண்டிருக்கும். சகோதரர் நலம் சாதாரணமாக இருந்துவரும். செய்தொழிலில் இலாப விரயம் சமமாகும். பந்துமித்திரர்கள் வருகைதருவர். சுபகாரியங்களில் ஈடுபடுதல் ஆகும். தாரபுத்திரர்களின் நலம் நன்முக இருந்துவரும். நவம்பர் 18, 19, 20, 28, 29, 30; டிசம்பர் 1, 2, 9, 10, 11, 12, 15 தேதிகளில் பணவரவும் நன்மைகளும் ஏற்படும். டிசம்பர் 4, 5 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான

## கருங்குயில்நாதன்பேட்டை

# கார்த்திகைஞாயிறு விழாச் சிறப்பு

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றாலும் சிறந்து விளங்கும் இத்தலம், மாயூரத்திற்கு வடகிழக்கில், மாயூரம் - பூம்புகார் கற்சாலையில், காவிரியின் வடகரையில், தருமபுரத்திற்கு வடபால் விளங்கித் திகழ்வது.

**தலச் சிறப்பு :-** சப்தமாதர்களில் வாராகி இங்கு சக்திபுரீசுவரரை வழிபட்டு அருள்பெற்ற சிறப்புடையது. இறைவன் கருணை என்றும் விளங்கும் திருத்தலமாகிய காரணத்தால் இந்திரன் வேண்டுகோளின்படி கருணாபுரம் என்றும், தக்கயாகத்தில் நிகழ்ந்த தண்டனைக்கு அஞ்சிய இந்திரன் கருங்குயில் வடிவாகி இங்குவந்து வழிபட்டுப் பேறுபெற்றமையால் கருங்குயில்நாதன்பேட்டை என்றும் வழங்கப் பெறுகிறது. முகில் - மேகம். நாதன் - தலைவன். மேகங்களுக்குத் தலைவன் இந்திரன்; அவனால் வழிபடப்பெற்றதால் கருமுகில்நாதன் பேட்டை எனவும் பெயர்பெறும்.

**மூர்த்திச் சிறப்பு :-** இறைவன் சக்திபுரீசுவரர். இறைவி ஆனந்தவல்லி. சப்தமாதர்கள் சந்நிதியும் உண்டு. மாயூரத்தைச் சூழவுள்ள சப்தமாதர்கள் வழிபட்ட சப்தபுரங்களில் இத்தலமும் ஒன்றாகும்.

**தீர்த்தச் சிறப்பு :-** 'கருணாதீர்த்தம்' என்ற பெயருடன் திருக்கோயிலின் தென்பால் விளங்குகின்றது. தட்சயாகத்தின்போது வீரபத்திரதேவரின் தண்டனைக்கு அஞ்சிக் கருங்குயில் வடிவாகிப் பறந்துசென்ற இந்திரன், சிவநிந்தகனாகிய தக்கன் அளித்த அவியை உண்டபாவம்தீர இத்தீர்த்தத்தில் மூழ்கி இறைவனை வழிபட்டுத் தன் பாவம் தீரப்பெற்றான். தொழுநோய் பற்றப்பட்ட அந்தணன் ஒருவன் இக்கருணாதீர்த்தத்தில் நீராடி, பெருமானை வழிபட்டுத் தன்நோய் நீங்கப்பெற்றான். தோல் சம்பந்தமான நோய்கள் பலவற்றையும் தீர்க்கும் நலம் உடையதாய் இன்றும் இத்தீர்த்தம் விளங்கிவருகிறது.

**கார்த்திகைஞாயிறு விழா -** ஆண்டுதோறும் கார்த்திகைமாதத்து ஞாயிற்றுக்கிழமைகளில் இத்தலத்து இறைவர் ஸ்ரீ சக்திபுரீசுவரர் பரிவாரங்களுடன் எழுந்தருளித் தருமபுரத்துக்கு எதிரில் காவிரியின் வடகரையில் போந்து தீர்த்தம் கொடுத்தருளுவார். இப்பெருவிழாவில் மாயூரத்தைச்சுற்றியுள்ள கிராம மக்கள் பலர் கலந்துகொண்டு இத்தீர்த்தத்தில் நீராடி இருமைப் பயன்களும் எய்தி இன்புற்றுவருகின்றனர்.

உ

சிவமயம்

# " ஞானசம்பந்தம் "

## 39 ஆம் ஆண்டு மலர்ப் பொருளடக்கம்


| எண் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 1 | அடிப்படைப் பண்புகளைக் காப்போம் | 241 |
| 2 | அந்தநாள் வருமா | 385 |
| 3 | அந்தரம் சுத்தியில்லை | 304 |
| 4 | அபிராமி அந்தாதி | 75, 123, 173, 220, 263, 308, 371, 405, 459. 505. 558 |
| 5 | அல்லது செய்தல் ஓம்புமின் | 49 |
| 6 | அறுகயிறூசல் | 277 |
| 7 | அன்னை அருள்மாலை | 48, 137, 150, 219, 268, 276, 324, 361, 423, 448, 452, 494, 518, |
| 8 | ஆரோக்கியம் | 515 |
| 9 | ஆவணி மூலவிழாக்கடிதங்கள் | 469 |
| 10 | ஆன்மிக வளர்ச்சிக்கு ஆபத்து வரலாமா | 145 |
| 11 | இணைவோம்; உழைப்போம்; உயர்வோம் | 289 |
| 12 | இந்து ஆலயங்களிலுள்ள ஐந்து பிராகாரங்களின் கதை | 24 |
| 13 | இயற்கை மருத்துவம் | 495 |
| 14 | உலகில் எத்தனை நாடுகள் | 519 |
| 15 | எதிர்காலம் | 40, 91, 140, 186, 234, 283, 332, 380, 428, 475, 524, 567 |
| 16 | ஏன் தெரியுமா ? | 112 |
| 17 | ஐயனுர் வழிபாடு | 27, 79 |

| எண் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 18 | ஒரு கோட்டன் இரு செவியன் | 313 |
| 19 | ஒரு விஞ்ஞானியின் கண்டுபிடிப்பு | 437 |
| 20 | கங்கை கரந்தார் | 449 |
| 21 | கடிதங்கள் | 160, 325, 375, 400, 496. |
| 22 | கடிதப்பாடல்கள் | 11, 226, 275, 326. |
| 23 | கல்லூர்ப்பெருமணம் | 401, 444. |
| 24 | களைக இணங்குக, வழிபடுக | 271 |
| 25 | கார்த்திகைஞாயிறு விழாச் சிறப்பு | 572 |
| 26 | கீதக்கண்ணாடி | 20 |
| 27 | குழப்பமும் தெளிவும் | 353 |
| 28 | குறைவு இலா நிறைவு | 106 |
| 29 | சங்க நூல்களில் அற்புதங்கள் | 320 |
| 30 | சமயப்பயிற்சி வகுப்பு அறிவிப்பு | 208 |
| 31 | சிவாலயங்களில் திருமுறை விண்ணப்ப வழிபாடு | 193 |
| 32 | செய்திகள் | 45, 87, 138, 180, 229, 279, 328, 377, 424, 473, 521, 563 |
| 33 | சைவசிகாமணி | 398, 465 |
| 34 | சைவத்தின் மேற் சமயம் வேறில்லை | 65 |
| 35 | தஞ்சையில்தான் நெல் குத்தகை பாக்கி அதிகம் | 562 |
| 36 | தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயில் பெருவிழா - திருநெறிய தெய்வத் தமிழ் மாநாட்டு நிகழ்ச்சி | க |
| 37 | தருமையாதீனத்தில் சைவசித்தாந்த அறிஞர்கள் ஆலோசனைக் கூட்டம் | i |
| 38 | தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ஆசியுரை | 6, 54, 101, 151, 201, 245, 294, 341, 389, 437, 485, |
| 39 | திருஅரிசிற்கரைப்புத்தூர், திருச்சிவபுரத் தலச் சிறப்பு | 497 |
| 40 | திருஆக்கூர்த் தலச்சிறப்பு | 12 |
| 41 | திருக்கடவூர் அபிராமிபட்டர் அருள்பெறு திருநாள் | 57 |
| 42 | திருக்கடவூர்மயானத் தலச் சிறப்பு | 59 |

| எண் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 43 | திருக்கலநல்லூர் திருக்கருக்குடித் தலச் சிறப்பு | 545 |
| 44 | திருக்கோட்டாறு, திரு அம்பர் பெருந்திருக்கோயில், திருஅம்பர்மாகாளத் தலச் சிறப்பு | 269 |
| 45 | திருத்தருமபுரம், திருநள்ளாற்றுத் தலச் சிறப்பு | 161 |
| 46 | திருத்திலதைப்பதித் தலச் சிறப்பு | 305 |
| 47 | திருநள்ளாறும், சனிபகவானும் | 33 |
| 48 | திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு | 207 |
| 49 | திருப்பேணுபெருந்துறை, திருநறையூர்ச்சித்தீச்சரம் தலச் சிறப்பு | 453 |
| 50 | திருமணஞ்சேரி | 511 |
| 51 | திருமீயச்சூர், திருமீயச்சூர்இளங்கோயில் தலச் சிறப்பு | 257 |
| 52 | திருவன்னியூர், திருக்கருவிலிக்கொட்டிட்டை தலச் சிறப்பு | 417 |
| 53 | திருவாமூரில்குருபூஜைவிழா | 240 |
| 54 | திருவீழிமிழலைத் தலச்சிறப்பு | 362 |
| 55 | நக்கீரர் கண்ட நற்காட்சி | 17 |
| 56 | நற்றமிழ் வளர்த்த நாவலர் | 1 |
| 57 | நவரசரின் நகைச்சுவை | 134 |
| 58 | நிறைபணி விழா | 471 |
| 59 | நெஞ்சே நீ கேள் | 179 |
| 60 | பணிசெய்யச் சேரவாரும் செகத்தீரே | 481 |
| 61 | பதிலுறும் பெறுவோம் | 433 |
| 62 | பார்வையாளர்குறிப்பு | 72, 86, 129, 157, 178, 192, 200, 225, 336 |
| 63 | பாவம் பற்று | 349 |
| 64 | பொம்மலாட்டம் | 73 |
| 65 | மகாமக நீராடுங்கள் | 97 |
| 66 | மகாமகப்பெருவிழா | 109 |
| 67 | மதிப்புரை | 64, 303 |

| எண் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 68 | மதுரை ஆதீனம் 291 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் பரிபூரணம் | 198 |
| 69 | மாணிக்கவாசகரும் மாதியலும் பாதியனும் | 130 |
| 70 | மாயூரம் குமரக்கட்டளை திருவிளக்கு அறக்கட்டளை அறிவிப்பு | 158, 251 |
| 71 | முனிமொழி | 299, 412 |
| 72 | வரவேற்கிறோம் வற்புறுத்துகிறோம் | 337 |
| 73 | வினை சுருங்க அருளாய் | 491 |
| 74 | வெண்ணிறமால்விடை அண்ணல் | 394 |
| 75 | வைத்தீசுவரன்கோயில் திருவிளக்கு அறக்கட்டளை அறிவிப்பு | 191 |
| 76 | 2200 ஆண்டு பழமையான கோயில் கண்டுபிடிப்பு | 185 |

# கார்த்திகைமாதச் சிறப்பு நாட்கள்

16—11—80 ஞாயிறு, முடவன் முழுக்கு, திருவையாறு மாதப்பிறப்பு தீர்த்தம், விஷ்ணுபதி புண்ணியகாலம் கிருதயுகாதி. விருச்சிகரவி 0 - 43. வேளூர் வள்ளியம்மை திருக்கல்யாணம். குத்தாலம், திருப்பறியலூர், கருங்குயில்நாதன்பேட்டை ஆகிய தலங்களில் பானுவார தீர்த்தம். இவ்வாறு ஒவ்வொரு பானுவாரத்திலும் நடைபெறும்.

17—11—80 திங்கள், வேளூர் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி திருவீதி உலாக்காட்சி. திருக்கடவூர் 1008 சங்காபிஷேகம். இவ்விதம் ஐந்து சோமவாரங்களிலும் நடைபெறும்.

18—11—80 செவ்வாய், தருமையாதீனம் 8 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அழகியதிருச்சிற்றம்பலதேசிக பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை.

19—11—80 புதன், தருமையாதீனம் 16 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சச்சிதானந்ததேசிகபரமாசாரியசுவாமிகள்குருபூஜை.

20—11—80 வியாழன், பிரதோஷம்.

21—11—80 வெள்ளி, பரணிதீபம். சர்வாலயதீபம் வைகானஸ பாஞ்சராத்திரதீபம். தருமையாதீனம் 18 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை.

22—11—80 சனி, தருமையாதீனம் ஸ்ரீ சண்முகர் கிருத்திகை அபிஷேகம். வேளூர்க்கிருத்திகை. பௌர்ணமி விரதபூஜை. அண்ணாமலை தீபம். கிருத்திகை விரதம். கணம்புல்ல நாயனர் குருபூஜை.

28—11—80 வெள்ளி, ஆயில்ய விழா.

29—11—80 சனி, காளாஷ்டமி. காலபைரவாஷ்டமி. திருவையாற்றில் தீர்த்தம். ஸ்ரீ ஆட்கொண்டார் அபிஷேகம். வடமாலைக்காட்சி.

1—12—80 திங்கள், மெய்ப்பொருள் நாயனர் குருபூஜை.

2—12—80 செவ்வாய், ஆனாய நாயனர் குருபூஜை.

8—12—80 திங்கள், மூர்க்க நாயனர் குருபூஜை.

9—12—80 செவ்வாய், திருக்கடவூர் ஸ்ரீ முனீசுவரபூஜை. சிறப்புலி நாயனர் குருபூஜை.

11—12—80 வியாழன், மாயூரம் - வள்ளலார்கோயில் ஸ்ரீ மேதா தக்ஷிணமூர்த்திக்கு விசேஷ அபிஷேக ஆராதனை.

12—12—80 வெள்ளி குத்தாலத்தில் அபிஷேகம். கடை வெள்ளி. ஸ்தலவிருக்ஷ பூஜை.

13—12—80 சனி. சிதம்பரம், உத்தரகோசமங்கை முதலிய தலங்களில் திருவெம்பாவை உற்சவ ஆரம்பம். திருவையாறு ஊஞ்சல் உற்சவ ஆரம்பம்.

15—12—80 திங்கள், ஷடசீதிபுண்ணியகாலம். திருவையாறு மாதப் பிறப்பு தீர்த்தம். தனு - ரவி 31-7.

உ

குருபாதம்

# "ஞானசம்பந்தம்"

## தருமையாதீனத் திங்கள் இதழ்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திலிருந்து வெளிவருவது. சமய உண்மைப் பொருள் முதலிய வற்றைக் குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந் துணையானது. கையொப்பத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி ஞானசம்பந்தம் பெற்றுப் பயனுறவும்,

| | | | |
|---|---|---|---|
| ஆண்டுச் சந்தா | ( உள்நாடு ) | ... ரூ. | 9—00 |
| ஆண்டுச் சந்தா | ( சிலோன் ) | ... ரூ. | 11—00 |
| ஆண்டுச் சந்தா | (வெளிநாடு) | ... ரூ. | 17—00 |
| ஆயுள் சந்தா | ( உள்நாடு ) | ... ரூ. | 100—00 |
| ஆயுள் சந்தா | (வெளிநாடு) | ... ரூ. | 125—00 |

கட்டணம் அனுப்பவேண்டிய முகவரி :—

செயலாளர்,
ஞானசம்பந்தம் செயலகம்,
தருமபுரம், மாயூரம் - 609 001
தஞ்சை மாவட்டம்.

குறிப்பு :— ஞானசம்பந்தம் தவிர பிற தருமையாதீன வெளியீடுகளைப் பெற விரும்புவோர், மேலாளர், ஞானசம்பந்தம் பதிப்பகம் - தருமபுரம். மாயூரம் - 609 001. என்ற முகவரிக்கே தொகை அனுப்பிப் பெறவேண்டும்.

Printed & Published by V. Ramaiah Pillai Manager Dharmapuram
at the Gnanasambandam Press. Dharmapuram Mayuram 10—11—80